ISSN: 2582-5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ நவம்பர். 25, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 51 ❖ ரூ.10

## தொழிலாளர்களை நெருங்க இன்னும் 15 மீட்டர் மட்டுமே தேசிய பேரிடர் மீட்புக் குழு

# தீவிரம்

## உத்தரகாண்ட் சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 கட்டுமானத் தொழிலாளர்களை மீட்கும் பணியில் எதிர்பாராத தடைகளால் பணி தாமதமாகி வருகிறது: அதிகாரிகள்

டேராடூன் , நவ. 25-

**உத்தராகண்ட் சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 கட்டுமானத் தொழிலாளர்களை மீட்க 13-வது நாளாக பணிகள் நடைபெற்று வரும் நிலையில், அவர்களை நெருங்க இன்னும் 15 மீட்டர் துளையிடும் பணி மட்டுமே எஞ்சியுள்ளது என்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) தெரிவித்துள்ளது.**



*உத்தரகாண்ட் சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41கட்டுமானத் தொழிலாளர்களை மீட்கும் பணியில் எதிர்பாராத தடைகளால் பணிதாமதமாகிவருகிறது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இடிபாடுகளுக்குள் 800 மிமீ விட்டம் கொண்ட குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதன்வழியாக, உள்ளே சிக்கி இருப்பவர்களை வெளியே அழைத்து வருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் குழாய் வழியாக அவர்களே தவழ்ந்து வருவார்கள் என கூறப்பட்ட நிலையில், தற்போது சக்கரங்கள் பொறுத்தப்பட்ட ஸ்ட்ரெச்சர்கள் மூலம் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஒத்திகையை NDRF நேற்று மேற்கொண்டது.*

*அமெரிக்க 'ஆகர்' இயந்திரத்தில் வியாழன்கிழமை தொழில்நுட்பக் கோளாறால் துளையிடும் பணி தாமதமானதாக தகவல் வெளியானது. அந்த இயந்திரம் சரி செய்யப்பட்டதாகவும், ஆனால் பணி தொடங்க சற்றுநேரம்ஆகலாம்எனவும் தகவல்வெளியாகியுள்ளது. எனினும், விரைவில் மீட்புப் பணிகள் மீண்டும் தீவிரம் அடையும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.*

*தொழிலாளர்களை மீட்க இன்னும் 15 மீட்டர் துளையிடும்பணிமட்டுமே எஞ்சியுள்ளது. அதாவது, தலா 6 மீட்டர் நீளமுள்ள இரண்டு குழாய்கள் பதிக்க வேண்டும். முதல் 6 மீட்டர், 51-52 மீட்டரை எட்டும் அதன்பிறகு எங்களால் எளிதாக தொழிலாளர்களை எட்ட முடியும் என்று மூத்த அதிகாரிகளும், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையமும் தெரிவித்துள்ளது. மேலும் 'இந்தியாவின் மகன்களை' காப்பாற்ற மாநில மற்றும் மத்திய அரசுகள் ஒத்துழைத்து வருகின்றன என தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் எனத் தெரிவித்துள்ளது. உத்தரகாண்ட் முதல்வர் பி.எஸ்.தாமி, சுரங்கப்பாதை மீட்புப் பணியை ஆய்வு செய்தார். அதன் பிறகு மீட்புப் பணியின் கடைசிக்கட்டப் பணியை வேகமாகவும், முழு எச்சரிக்கையுடனும் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.*

*முன்னதாக உத்தராகண்ட் மாநிலம் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக சில்க்யாரா - பர்கோட் இடையே 4.5 கி.மீ. தொலைவுக்கு அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதையில் கடந்த 12-ம் தேதி மண் சரிந்தது விழுந்தது. இதன் காரணமாக சுரங்கப் பாதைக்குள் 41 தொழிலாளர்கள் சிக்கி உள்ளனர். மீட்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், நேற்று தொழிலாளர்களைத் தொட்டு விடும் தூரத்தில் மீட்பு குழுவினர் 46.8 மீட்டர் தூரம் துளையிட்டிருந்த நேரத்தில் ஆகர் துளையிடும்இயந்திரத்தில் பழுது ஏற்பட்டது. இதனால் வியாழக்கிழமை இரவு மீட்பு பணிகள் நிறுத்தப்பட்டன. சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் தொழிலாளர்களுடன் தொடர்புகொள்வதற்காக மினி ட்ரோன்கள் மற்றும் ரோபோக்களை பயன்படுத்த டிஆர்டிஓ முயற்சி செய்தது. இந்த நிலையில், துளையிடும் பணிகளுக்கு மத்தியில் ஆகர் இயந்திரம் வியாழக்கிழமை பழுதடைந்ததால் மீட்புப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன.*

*இதனிடையே, சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் 41 தொழிலாளர்களின் மன அழுத்தங்களைப் போக்குவதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மருத்துவர்கள் விவரித்துள்ளனர். இது குறித்து மீட்புப் பணிகள் நடைபெறும் இடத்தில் இருக்கும் மனநல மருத்துவர்களில் ஒருவரான டாக்டர் ரோகித் கோண்ட்வால் கூறுகையில், "உள்ளே இருக்கும் தொழிலாளர்களின் மன அழுத்தத்தை போக்க நாங்கள் அவர்களுக்கு லுடோ, செஸ் மற்றும் சீட்டுக்கட்டுகளை வழங்க முடிவுசெய்தோம்.பல்வேறு காரணங்களால் மீட்புப் பணிகள் தாமதமாகி வருகின்றன. உள்ளே இருப்பவர்கள் தங்களின் மன அழுத்தத்தைப் போக்க திருடன் - போலீஸ் விளையாட்டு விளையாடுவதாகவும், யோகா செய்வதாகவும் எங்களிடம்கூறினர்"என்று தெரிவித்தார். மற்றொரு மருத்துவ நிபுணர் கூறுகையில், "உள்ளே சிக்கி இருப்பவர்களின் மனோதிடம் அதிமாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். அதற்காக, அவர்களுடன் மருத்துவக் குழு ஒன்று தினமும் பேசி, அவர்களின் மனோதிடம் மற்றும் ஆரோக்கியம் பற்றி கேட்டறியப்படுகிறது" என்று கூறினார்.*

## தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் திருக்கோயில்கள் சார்பில் 1,100 திருமணங்கள் நிறைவு : தமிழக அரசு

சென்னை, நவ. 25-

திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்கு திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கான திருமணத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று நேற்று நடத்தி வைத்தார்.



இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்கு திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கான திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

2022-2023 ஆம் ஆண்டுக்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், "ஒரு இணை ஆணையர் மண்டலத்துக்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்படும். இதற்கான செலவினத்தைத் திருக்கோயில்களே ஏற்கும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் 4.12.2022 அன்று சென்னை இணை ஆணையர் மண்டலத்துக்குட்பட்ட திருக்கோயில்கள் சார்பில் 25 மணமக்களுக்கு தமிழக முதல்வர் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் மொத்தம் 500 மணமக்களுக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. மேலும், திருக்கோயில்கள் மூலம் நடத்தப்படும் திருமணத்துக்கு அனுமதிக்கப்பட்ட திட்டச் செலவினத் தொகையை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டுக்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், "பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.50,000 மதிப்பில் சீர் வரிசைகள் வழங்கி திருமண விழா நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 500 இணைகளுக்கு திருக்கோயில் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இவ்வாண்டு கூடுதலாக மேலும் 100 இணைகளைச் சேர்த்து ஒரு மண்டலத்துக்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக திருமண விழா நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, முதற்கட்டமாக தமிழக முதல்வர் 7.7.2023 அன்று சென்னை, கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், 34 மணமக்களுக்குதிருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து சென்னையில் நீர்வளத்துறை அமைச்சர் தலைமையிலும், பிற மாவட்டங்களிலும் திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 2022 2023 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட 500 திருமணங்களும், 2023 2024 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட 600 திருமணங்களில் 564 திருமணங்களும், ஆகமொத்தம் 1,064 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. நேற்றைய தினம் திருக்கோயில்கள் சார்பில் பிற மாவட்டங்களில் 34 மணமக்களுக்கும், சென்னையில் தமிழக முதல்வர் தலைமையில் 2 மணமக்களுக்கும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு மொத்தம் 1,100 திருமணங்கள் நிறைவு பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ. கருணாநிதி, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், ந.திருமகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு புதிய கட்டிடங்களை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்

**பொன்னமராவதி, நவ. 25-**

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பகவாண்டிப்பட்டி ஊராட்சி, பகவாண்டிப்பட்டியில், சட்டமன்றஉறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய அங்காடி கட்டிடத்தினையும் மற்றும் கண்டியாநத்தம் ஊராட்சி, கேசராப்பட்டியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய அங்காடி கட்டிடத்தினையும் மற்றும் ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில், நமக்கு நாமே திட்டத்தின்கீழ், ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய கூடுதல் பள்ளி கட்டிடத்தினையும், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்தார்.



பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், பொதுமக்களுக்குத் தேவையான குடிமைப் பொருட்கள் தங்களது வீடுகளுக்கு அருகாமையிலேயே கிடைக்கும் வகையில் பல்வேறு புதிய அங்காடிகள் திறக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், பகவாண்டிப்பட்டிலும், கண்டியாநத்தம் ஊராட்சி, கேசராப்பட்டியிலும் புதிய அங்காடி கட்டிடங்கள் மற்றும் ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிய கூடுதல் பள்ளி கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

அதன்படி, பகவாண்டிப்பட்டியில் கட்டப்பட்டுள்ள, 13 பொன்னமராவதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., புதிய அங்காடி கட்டிடம் திறந்து வைத்ததன் மூலம் பகவாண்டிப்பட்டி, காயாம்புஞ்சை, மைலாப்பூர;, அஞ்சுபுளிப்பட்டி, அரியாண்டிப்பட்டி, வலையப்பட்டி, பொன்னமராவதி ஆகிய கிராமங்கள் இந்த அங்காடியின் மூலம் பயன்பெறும். இந்த அங்காடியில் 1,101 குடும்ப அட்டைகள் இடம் பெற்றுள்ளன.

அதேபோன்று, கண்டியாநத்தம் ஊராட்சி, கேசராப்பட்டியில், கட்டப்பட்டுள்ள, ஆஆ137 ஆலவயல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., புதிய அங்காடி கட்டிடம் திறந்து வைத்ததன் மூலம் ஆலவயல், கண்டியாநத்தம், செம்மலாபட்டி, தேனூர், நாத்துப்பட்டி, ஆகிய கிராமங்கள் இந்த அங்காடியின் மூலம் பயன்பெறும். இந்த அங்காடியில் 210 குடும்ப அட்டைகள் இடம் பெற்றுள்ளன. இதன்மூலம் இப்பகுதி பொதுமக்கள் நீண்ட தூரம் சென்று குடிமைப் பொருட்கள் பெற்றுவருந்தது தவிர;க்கப்பட்டு, இனிவரும் காலங்களில் தங்களது வீடுகளுக்கு அருகாமையிலேயே அத்தியாவசியப் பொருட்களை பெற முடியும்.

மாணவ, மாணவிகளின் நலனிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார;கள். அந்தவகையில் பள்ளி உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி கல்வி கற்கும் ஆர்வத்தினை அதிகரித்து வருகிறார்கள். அதன்படி, புதிய கூடுதல் பள்ளி கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில், மாணவர்களின் எண்ணிக்கை உயர்வதற்கு வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே முதலமைச்சரால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார;.

இந்நிகழ்ச்சிகளில், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், பொன்னமராவதி கள அலுவலர் அன்னலட்சுமி, கூட்டுறவு சார் பதிவாளர் சியாமளா, தலைமையாசிரியர் நவநீதகிருஷ்ணன், செயலாளர் சண்முகசுந்தரம், ஊராட்சிமன்றத் தலைவர் செல்வி முருகேசன், உதவி தலைமையாசிரியர் கணேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு புதிய கட்டிடங்களை சுற்றுச்சூழல்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்

அறந்தாங்கி , நவ. 25-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தொழுவங்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.28.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய இரண்டு வகுப்பறை கட்டிடத்தினையும் மற்றும் தொழுவங்காடு ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் நேற்று திறந்து வைத்தார்.



பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர் வசதி, மின் வசதி,கழிவறைவசதிஉள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், இன்றையதினம் தொழுவங்காடு ஊராட்சியில், ரூ.28.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இரண்டு வகுப்பறை கட்டிடத்தினையும், ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும் திறந்து வைக்கப்பட்டது.

அதன்படி இந்த புதிய இரண்டு வகுப்பறை கட்டிடம் திறந்து வைத்ததன் மூலம் இப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை உயரும். மேலும் இக்கட்டிடத்தில் கல்வி சார்ந்த வரைபடங்கள், காற்றோட்ட வசதியுடன் சிறப்புடன் கட்டப்பட்டுள்ளது. இதனை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதனைத்தொடர்ந்து, புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம் திறந்து வைத்ததன் மூலம் இப்பகுதிகளில் உள்ள குழந்தைகள் இக்கட்டிடத்தில் கல்வி பயில ஏதுவாக அமையும். தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தப்படும் இதுபோன்ற கல்வி சார்ந்த திட்டங்களை மாணவ, மாணவிகள், குழந்தைகள் அனைவரும் உரிய முறையில் பெற்று கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன், வட்டாட்சியர் சபருல்லா, ஊராட்சிமன்றத் தலைவர் சுமதி சுரேஷ், உதவிப் பொறியாளர் தமிழ்மணி, ஒன்றியக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## கத்தாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியர்கள் - மேல்முறையீடு ஏற்பு

கத்தார் : நவ. 25-

கத்தாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியர்களுக்கு எதிரான வழக்கில் அவர்களின் மேல்முறையீட்டு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.


இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரிகளான புர்னேன்டு திவாரி, சுகுனாகர் பகாலா, அமித் நாக்பால், சஞ்சீவ் குப்தா, நவ்தேஜ் சிங் கில், பீரேந்திர குமார் வெர்மா, சவுரப் வசிஸ்ட், ராகேஷ் கோபகுமார் ஆகிய 8 பேர் கடந்த ஆண்டு ஆகஸ்ட்டில் கத்தார் உளவுப் பிரிவு காவல்துறையால் கைது செய்யப்பட்டனர். எனினும், அவர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்து இதுவரை தெரிவிக்கப்படவில்லை. அதேநேரத்தில், அவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனுக்கள் பலமுறை தள்ளுபடி செய்யப்பட்டன. இந்நிலையில், கடந்த அக்டோபர் மாதம் அவர்கள் அனைவருக்கும் முதன்மை அமர்வு நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அவர்கள், இந்திய தூதரகத்தை அணுக அனுமதி அளிக்கப்பட்டதை அடுத்து, 8 பேரையும் பத்திரமாக மீட்க இந்திய தூதரகம் நடவடிக்கைகளை தொடங்கியது. 8 பேரும் கடற்படையில் பொறுப்புள்ள அதிகாரிகளாக 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி இருக்கிறார்கள்.

இந்நிலையில், 8 பேரில் ஒருவரின் சகோதரியான மீட்டு பார்கவா, அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். அதில், தனது சகோதரரை பத்திரமாக மீட்க அரசு தனது நடவடிக்கையை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், அவர் விடுத்துள்ள எக்ஸ் பதிவில், இந்த விஷயத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலையிட வேண்டும் என்றும் தாமதமின்றி அவர்கள் அனைவரும் இந்தியா திரும்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்








# அமைச்சர் பொன்முடிக்கு அமலாக்கத்துறை சம்மன் நவ.30–ல் விசாரணைக்கு ஆஜராக உத்தரவு

சென்னை : நவ. 25, தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி வரும் 30–ம் தேதி, மீண்டும் விசாரணைக்கு ஆஜராக அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது.



கடந்த 2006 முதல் 2011 வரையிலான காலக்கட்டத்தில் நடந்த திமுக ஆட்சியில், தமிழக அமைச்சரவையில், தற்போதைய உயர் கல்வித் துறை அமைச்சரான பொன்முடி கனிம வளங்கள் மற்றும் சுரங்கத்துறை அமைச்சராக இருந்தார். அமைச்சர் பொன்முடி கனிம வளங்கள் மற்றும் சுரங்கத்துறையை கவனித்து வந்ததால், அவருடைய மகன் கவுதம சிகாமணி, மற்றும் அவரது உறவினர்கள் அந்தப் பகுதியில் செம்மண் எடுக்க 2007 பிப்ரவரியில் விண்ணப்பித்திருந்த நிலையில், அதற்கான அனுமதி 2007 மே மாதத்தில், மிக குறுகிய காலக்கட்டத்துக்குள் அனுமதி வழங்கப்பட்டதாக அப்போது குற்றம்சாட்டப்பட்டது. செம்மண் குவாரியில் மண் அள்ள அனுமதிக்கப்பட்ட அளவை மீறி, 2 லட்சத்து 64 ஆயிரத்து 644 லோடு லாரி செம்மண் எடுத்ததன் மூலம், அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக பொன்முடி உள்ளிட்ட 8 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த பின்னணியில், அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத் துறை சோதனை நடந்தது. சென்னை மற்றும் விழுப்புரத்தில் அமைச்சர் பொன்முடிக்கு தொடர்புடைய இடங்களில் அமலாக்கத் துறையினர் கடந்த ஜுலை 17ம் தேதி சோதனை நடத்தினர். 13 மணி நேர சோதனைக்குப் பிறகு, அமைச்சர் பொன்முடிக்கு சொந்தமான இடங்களில் நடைபெற்ற சோதனையில் ரூ.41.9 கோடி மதிப்புள்ள வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்பட்டதாக அமலாக்கத் துறை தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகின.

மேலும், வெளிநாட்டு கரன்சிகள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை அமலாக்கத்துறை கைப்பறியதாக கூறப்பட்டது. இதைத்தொடர்ந்து, அமலாக்கத்துறை சோதனைக்குப் பிறகு, சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்துக்கு அன்றைய தினமே, அழைத்துச்செல்லப்பட்ட அமைச்சர் பொன்முடி மற்றும் அமைச்சர் பொன்முடியின் மகனும், எம்.பி.யுமான கவுதம சிகாமணி ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இந்த நிலையில், அமைச்சர் பொன்முடியிடம் மீண்டும் விசாரணை நடத்த அமலாக்கத்துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பி உள்ளனர். இந்த விசாரணையின்போது, ஏற்கெனவே, அவரது வீடு மற்றும் அவருக்குச் சொந்தமான இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளவிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.



▶ புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கொத்தமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.மெய்யநாதன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு இருக்கைகள் வழங்கி, புதிதாக அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவின் செயல்பாட்டை தொடங்கி வைத்து, புதிதாக கட்டப்பட்டுள்ள வாகனம் நிறுத்துமிடத்தை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பள்ளி தலைமையாசிரியர்,ஆசிரியர்கள்,மாணவர்கள் கலந்துகொண்டனர்.




### ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

# குழந்தைகளின் கல்விச் செலவுத் தொகை ரூ.50,000 ஆக உயர்வு

சென்னை : நவ. 25, அரசுப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான கல்விச் செலவு ரூ.50,000 ஆகவரை உயர்த்தி தமிழக அரசு அசத்தல் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.



தமிழகத்தில், அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியை கருத்தில் கொண்டு தொழில் நுட்பக் கல்வி, பட்டப் படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பயில அவர்தம் குழந்தைகளுக்கு ஆசிரியர் நல நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் நிதியுதவியை உயர்த்தி தமிழ்நாடு முதல்வர் அறிவித்துள்ளார்.

இதன்படி உயர்கல்வி பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான கல்விச் செலவு ரூ.50,000 வரை உயர்த்தி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்வியாண்டிலும் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும், ஓய்வு பெற்ற, பணியில் இருக்கும்போது இறந்த ஆசிரியர்களின் குழந்தைகள் மற்றும் தொழிற்கல்வி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பிற்கு ரூ.5,000–ம், பட்டயப்படிப்பிற்கு ரூ.2500–ம் கடந்த 2021–2022ம் கல்வியாண்டு வரை வழங்கப்பட்டு வந்தது.

இதனை பட்டப்படிப்பிற்கு ரூ.10,000 ஆகவும், பட்டயப்படிப்பிற்கு ரூ.5,000 ஆகவும் உயர்த்தி 2022–2023ம் கல்வியாண்டு முதல் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், 2023–2024ம் கல்வியாண்டு முதல் ஆசிரியர்களின் குழந்தைகள் (ஒரு ஆசிரியருக்கு ஒரு குழந்தைக்கு மட்டும்) உயர் கல்வி பயில்வதற்கு கல்வி கட்டணத் தொகையாக ரூ.50,000 ஆக தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் தொழிற்கல்வி பட்டயப்படிப்பிற்கு ரூ.15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான நிபந்தனைகளைத் தெரிவித்து அதனடிப்படையில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் குழந்தைகளை தேர்வு செய்ய மாநில அளவில் குழு அமைக்க வேண்டும் என அரசு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு சம்மன்

# அமலாக்கத்துறைக்கு எதிராக தமிழக அரசு வழக்கு

சென்னை : நவ. 25, மணல் குவாரி விவகாரத்தில் 10 ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியதற்கு எதிராக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டில் உள்ள மணல் குவாரிகளில், அரசு நிர்ணயித்த அளவைவிட கூடுதலாக மணல் விற்பனை செய்ததாகவும், மணல் ஒப்பந்த குவாரிகளில் வந்த வருமானத்தை சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்திருந்தது.

இதையடுத்து சட்டவிராத பணப் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை அதிகாரிகள் கடந்த செப்டம்பர் 12ம் தேதி ஒரே நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டம் முத்துபட்டினத்தை சேர்ந்த தொழிலதிபர் ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம், ரத்தினத்தின் உறவினர் கோவிந்தன், மணல் குவாரி அதிபர் கரிகாலன் ஆகியோரது வீடுகளில் சோதனை மேற்கொண்டனர்.

இதேபோல் பொதுப்பணித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர் திலகம், நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா ஆகியோருக்கு சொந்தமான வீடுகள் மற்றும் எழிலகத்தில் உள்ள நீர்வளத்துறை அலுவலகம் என மொத்தம் 34 இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர். இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்த இந்த சோதனையில், மணல் குவாரி அதிபர் ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம், கரிகாலன் மற்றும் நீர்வளத்துறை அதிகாரிகள் வீடுகளில் இருந்து கணக்கில் வராத பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து ஆவணங்கள், ரூ.12.82 கோடி ரொக்கப்பணம், ரூ.58.86 லட்சம் மதிப்புள்ள 1024 கிராம் தங்க நகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த சோதனையை தொடர்ந்து 10 மாவட்ட ஆட்சியர்கள், நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா, ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை பொறியாளர் திலகம் ஆகியோரை விசாரணைக்கு ஆஜராகக் கூறி அமலாக்கத்துறை சார்பில் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. இந்த சம்மனை தொடர்ந்து நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் சில முக்கிய ஆவணங்களுடன் நேரில் ஆஜரானார்.

இந்த பின்னணியில் மாவட்ட ஆட்சியர்களுக்கு சம்மன் அனுப்பியதை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த மனுவில் சட்டவிராத பணப்பரிமாற்றத் தடை சட்டத்தில் கனிமவள சட்டம் சேர்க்கப்படாத நிலையில் மாவட்ட ஆட்சியருக்கு சம்மன் அனுப்ப அமலாக்கத்துறைக்கு அதிகார வரம்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாநில அரசு அதிகாரிகளை துன்புறுத்தும் நோக்கிலும், அரசு நிர்வாகத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கிலும், அமலாக்கத்துறை செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "டெல்லியில் உள்ள தூதரகத்தை நிரந்தரமாக மூடுகிறோம்" – ஆப்கானிஸ்தான்

புதுடெல்லி : நவ. 25, இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான சவால்கள் காரணமாக டெல்லியில் உள்ள தூதரகத்தை நிரந்தரமாக மூடுவதாக ஆப்கானிஸ்தான் நேற்று அறிவித்துள்ளது.

டெல்லியிலுள்ள தூதரகத்தை மூடுவது தொடர்பாக ஆப்கன் தூதரகம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில் கூறியிருப்பதாவது : "இந்திய அரசாங்கத்தின் தொடர்ச்சியான சவால்கள் காரணமாக டெல்லியில் உள்ள ஆப்கன் தூதரகம் நிரந்தரமாக மூடப்படுகிறது. இந்த நடவடிக்கை நவ.23–ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. கடந்த செப்.30–ம் தேதி தூதரகத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசின் நிலைப்பாடு மாறி, பணிகளைச் சாதாரணமாக செய்யும் அளவுக்கு நிலைமை இயல்பானதாக மாறும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை சிலர் உள் முரண்பாடு மற்றும் தூதர்கள் தாலிபன்களுக்கு ஆதரவாக மாறிவிட்டார்கள் என்று முத்திரைக் குத்த முயற்சிக்கலாம். ஆனால் இந்நடவடிக்கை முழுக்க முழுக்க கொள்கைகள் மற்றும் நலன்களின் பரந்த மாற்றங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டது. எங்களின் பணிக்காலம் முழுவதும், இந்தியாவில் உள்ள ஆப்கன் மக்கள் வழங்கிய ஆதரவுக்கும் புரிதலுக்கும் தூதரகம் தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. வளங்கள் மற்றும் அதிகாரத்தில் வரம்புகள் இருந்த நிலையில் காபூலில் ஒரு நிலையான அரசாங்கம் இல்லாத போதிலும் தூதரகம் அவர்களின் நலன்களுக்காக செயல்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நவம்பர் 1ம் தேதி முதல் இந்தியாவுடனான அனைத்து தூதரக நடவடிக்கைகளையும் நிறுத்துவதாக அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருந்தது. அதில், "ஆழ்ந்த வருத்தத்துடனும், சோகத்துடனும், ஏமாற்றத்துடனும் புதுடெல்லியில் உள்ள ஆப்கன் தூதரகம் அதன் அனைத்து செயல்பாடுகளையும் நிறுத்துகிறது" என்று கூறப்பட்டிருந்தது.

### 2 மாதத்தில் 30 பேர் உடல் உறுப்பு தானம்

# தமிழ்நாடு உலக சாதனை படைத்திருப்பதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்

சென்னை : நவ. 25, உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என தமிழக அரசு அறிவித்த பின்னர், உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.




சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 33 வயதான இளைஞர் மூளைச்சாவு அடைந்த நிலையில், அவர் தனது உடல் உறுப்புகளை தானம் செய்திருந்த நிலையில், அவரது உடலுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மரியாதை செய்தார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், ''33 வயதான இளைஞர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மூளைச்சாவு அடைந்த நிலையில், அவரது பெற்றோர்களிடம் உடல் உறுப்புதானம் குறித்து எடுத்துக்கூறிய நிலையில் அவர்கள் மூளைச்சாவு அடைந்த மகனின் உடல் உறுப்புகளை தானமாக அளித்துள்ளார்கள்.

நூற்றாண்டைக் கடந்த ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் முதல் நிகழ்வாக நேற்று உடல் உறுப்புதானம் நிகழ்வு முதல் முறையாக நடந்துள்ளது. தமிழகத்தில் மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்புதானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு சார்பாக மரியாதை செய்யப்படும் என அறிவித்திருந்த நிலையில், கடந்த 2 மாதங்களில் மட்டும் மூளைச்சாவு அடைந்த 30 பேரின் உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டுள்ளது.

இது இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவில் நிகழ்த்தப்பட்ட சாதனையாக பார்க்கப்படுகிறது. இந்த 30 பேரின் உடல் உறுப்பு தானமும் பலரின் வாழ்க்கையில் விளக்கேற்றி வைத்துள்ளது. அரசு மரியாதையுடன் உடல் அடக்கம் செய்யப்படும் என அறிவித்த பிறகு 3315 பேர் உடல் உறுப்பு தானம் செய்ய முன் வந்துள்ளனர். உடல் உறுப்பு வேண்டி 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்" என்றார்.



▶ சென்னை நேரு ஸ்டேடியத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு சென்னையின் எப் சி அணியும், ஈஸ்ட்பெங்கால் எப் சி அணியுடன் ஐ எஸ் எல் போட்டியில் மோத உள்ளனர் ,இது குறித்து பத்திரிகை யாளர் சந்திப்பு சென்னை ஹயாத் ரெஜிடன்சி ஒட்ட்லில் நடைபெற்றது. அப்போது சென்னையின் எப் சி அணியின் பயிற்சி யாளர் ஒவல் கோவன் கூறுகையில், "ஈஸ்ட் பெங்கால் போன்ற ஒரு பெரிய கிளப்பிற்கு எதிராக விளையாடுவது எப்போதுமே உற்சாகமாக இருக்கும். எங்களிடம் அருமையான ரசிகர் பட்டாளம் உள்ளது, எங்கள் ரசிகர்கள் வீரர்களுக்கு சிறப்பாக ஆதரவு அளித்து உற்ச்சாகம் படுத்துவார்கள் , எனவே, எங்கள் ரசிகர்களுக்கு வெற்றியை பரிசு அளிக்க விரும்புகிறோம், மேலும் அணி நன்றாகவும் நம்பிக்கையுடனும் விளையாட வேண்டும். நமது ரசிகர்கள் முகத்தில் புன்னகையை ஏற்படுத்த வேண்டும் அதற்கு நாம் கண்டிப்பாக வெற்றி பெறவேண்டும் என்றார்."

# இறப்பு சான்று கேட்ட பெண்ணுக்கு பாலியல் தொல்லை கிராம நிர்வாக அதிகாரி மீது புகார்



விக்கிரவாண்டி : நவ. 25, விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தாலுகாவுக்கு உட்பட்ட நல்லாபாளையம் பகுதியில் வசித்து வருபவர் சங்கீதா. இருளர் சமூகத்தை சேர்ந்தவர். இவரது கணவர் ஐய்யனார் கடந்த 2014ம் ஆண்டு உடல் நலக்குறைவால் இறந்துவிட்டார். இவர்களுக்கு 11 வயதில் கமலேஷ் என்ற மகன் உள்ளான். இந்நிலையில், சங்கீதா தனது கணவரின் இறப்பு சான்றிதழ் பெற, கிராம நிர்வாக அலுவலர், ஆரோக்கியதாஸ் என்பவரிடம் மனு அளித்துள்ளார்.

அப்பொழுது, இறப்பு சான்றுக்கு ரூபாய் 5,000 கொடுக்க வேண்டும் என ஆரோக்கியதாஸ் கேட்டதாக தெரிகிறது. அதற்கு சங்கீதா தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், ஆயிரம் ரூபாய் இருக்கிறது அதை தருகிறேன் என கூறியுள்ளார். அதனை பெற்றுக்கொண்ட ஆரோக்கியதாஸ், சங்கீதாவிடம் அவரது செல்போன் எண்ணை வாங்கிக்கொண்டு அனுப்பிவைத்துள்ளார்.

இதனையடுத்து, தினமும் இரவு நேரங்களில் அவர், சங்கீதாவிற்கு போன் செய்து தகாத முறையில் பேசியதாக தெரிகிறது. இந்த தொல்லையை தவிர்க்க அவர் மேலும் 3,000 ரூபாய் பணம் லஞ்சமாக தந்துள்ளார். இதையடுத்து, சங்கீதாவிற்கு இறப்பு சான்றிதழ் வழங்கியுள்ளார் ஆரோக்கியதாஸ். இந்நிலையில், மகளிர் மாதாந்திர உதவித்தொகைக்காக சங்கீதா விண்ணப்பித்திருந்த நிலையில் அதனை கிராம நிர்வாக அலுவலர் ஆரோக்கியதாஸ் ரத்து செய்துள்ளார். இதுகுறித்து சங்கீதா அவரிடம் கேட்டபோது, தன்னுடைய பாலியல் இச்சைக்கு இணங்குமாறு ஆரோக்கியதாஸ் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட சங்கீதா தன்னுடைய சகோதரர் சூர்யாவிடம் கூறியுள்ளார். இதுகுறித்து கிராம நிர்வாக அலுவலரிடம் சூர்யா கேட்டபோது, அவரையும் கிராம நிர்வாக அலுவலர் ஆரோக்கியதாஸ் மிரட்டியுள்ளார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட பெண் சங்கீதா மற்றும் அவரின் உறவினர்கள் 50க்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர். இந்நிலையில், கிராம நிர்வாக அலுவலர் செல்போனில் இருளர் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆடியோ வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சாலை விபத்தில் 3 பேர் காயம்: மாவட்ட கலெக்டர் மீட்டு அரசு மருத்துவமனையில் அனுமதித்தார்




மயிலாடுதுறை, நவ, 25–

மயிலாடுதுறையில் நடந்த சாலை விபத்தில் காயமடைந்த 3 பேரை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி மீட்டு அரசு பெரியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார்.

மயிலாடுதுறை மாவட்டம் சித்தர்காடு ரயிலடி சாரங்கம்பாணி மேம்பாலத்தில் 2 இருசக்கர வாகனங்கள் மற்றும் கார் ஒன்றும் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானது. இதில், மூவலூரைச் சேர்ந்த கணேசன் மகன் சுரேந்தர்(28), தேரழந்தூரைச் சேர்ந்த சந்தானகிருஷ்ணன் மகன் வெங்கட்ராமன்(54) மற்றும் கூறைநாடு மாமரத்துமேடை பகுதியைச் சேர்ந்த பாலு மகன் சுகுமாறன்(27) ஆகிய 3 பேர் காயம் அடைந்தனர். இவ்விபத்தில் சுரேந்தர் படுகாயம் அடைந்தார். மேலும் இருவருக்கும் லேசான காயம் ஏற்பட்டது.

அப்போது, அவ்வழியாக குத்தாலம் நோக்கி சென்ற மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி உடன் வந்த செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் அரசு வாகனத்தில் காயமடைந்தவர்களை ஏற்றிக்கொண்டு தானும் அதே வாகனத்தில் சென்று மயிலாடுதுறை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை நடைபெற்றுவருகிறது. படுகாயம் அடைந்த சுரேந்திரன் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்து குறித்து மயிலாடுதுறை போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மாவட்ட ஆட்சியரின் இந்த மனிதநேயமிக்க செயல் பிறருக்கு முன்னுதாரணமாக அமைந்தது.

# விழிப்புணர்வு வாகனத்தை கலெக்டர் தொடங்கி வைத்தார்



வேலூர். நவ.25.

ஆண்களுக்கான நவீன குடும்ப நல கருத்தடை சிகிச்சை குறித்த விழிப்புணர்வு வாகனத்தை வேலூரில் கலெக்டர் தொடங்கி வைத்தார்.

ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து தொடங்கியவிழிப்புணர்வு வாகனத்தை கலெக்டர் குமாரவேல் பாண்டியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. பானுமதி, துணை இயக்குநர் (குடும்ப நலன்) மரு. மணிமேகலை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை எண்ணூரில் பெட்டி கடையில்

# விற்பனைக்கு வைத்திருந்த குட்கா பறிமுதல் கடைக்கு சீல் வைத்த உணவு பாதுகாப்பு அதிகாரி



சென்னை,நவ,25

சென்னை எண்ணூர் மணலி விரைவு சாலை ராமகிருஷ்ணன் நகர் பகுதியில் தங்கவேல்( 61) என்பவர் பெட்டி கடை நடத்தி வருகிறார்.

இந்த கடையில் குட்கா விற்கப்படுவதாக எண்ணூர் போலீசார்க்கு ரகசிய தகவல் கிடைத்தது தகவலின் பேரில் அம்பத்தூர் மதுவிலக்கு பிரிவு உதவி ஆணையர் அசோகன் எண்ணூர் காவல் ஆய்வாளர் ஜெகந்நாதன், உதவி ஆய்வாளர்கள் அந்தோணி மேரி, பாஸ்கரன் ஆகியோர் விரைந்து சென்றனர் கடையை சோதனை செய்ததில் தமிழக அரசு தடைசெய்யப்பட்ட கூல் லிப், ஹன்ஸ் புகையிலை பாக்கெட் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து கடையில் இருந்த குட்கா பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர் இதனையடுத்து உணவுப் பாதுகாப்பு துறை அதிகாரி இளங்கோவன் பெட்டிக்கடைக்கு சீல் வைத்தார். எண்ணூர் போலீசார் தங்கவேலுவிடம் விசாரணை மேற்கொண்ட போது அவர் கொடுத்த தகவலின் பெயரில் திருவொற்றியூர் விம்கோ நகர் ITC பகுதியைச் சேர்ந்த முத்துப்பாண்டியிடம் வாங்குவதாக தெரிவித்தார்.

இதையடுத்து எண்ணூர் போலீசார் முத்துப்பாண்டி வீட்டை சோதனை செய்தபோது வீட்டில் சுமார் 14 கிலோ கூலிப், ரெமோ பாக், ஸ்வாகெட் என்ற தமிழக அரசு தடை செய்யப்பட்ட குட்கா பொருளை போலீசார் பறிமுதல் செய்து முத்துப்பாண்டியை போலீசார் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்ட போது தனக்கு பெங்களூரில் இருந்து கொண்டு வந்து குட்கா பொருட்களை விற்பதாகவும் தெரிவித்தார் இதனை அடுத்து முத்துப்பாண்டி மீது போலீசா வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# ஆரணி பேரூர் திமுக செயலாளர் இல்ல சீமந்த நிகழ்ச்சி டி.ஜே.கோவிந்தராஜன் குடும்பத்துடன் பங்கேற்பு




ஊத்துக்கோட்டை,நவ25–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து-எம்.அமுதா தம்பதியரின் இளைய மகன் ஜீவா-இளைய மருமகள் ஜெ.சுகன்யா ஆவார்.

இந்நிலையில்,ஜெ. சுகன்யா நிறைமாத கர்ப்பிணியாக உள்ளார். எனவே,பஞ்செட்டி ஊராட்சியில் பொன்னேரி நெடுஞ்சாலையில் உள்ள பி.ஆர்.பி கிராண்ட் மஹால் திருமண மண்டபத்தில் சீமந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு ஜெ.சுகன்யாவை வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரின் மனைவியும், கும்மிடிப்பூண்டி முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினருமான கீதா,மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன், டி.ஜே.எஸ் கல்வி குழுமத்தின் இயக்குனர் டி.ஜே.டி.தினேஷ் திமுக நிர்வாகிகள் ஆரணி ரோஸ்பொன்னையன்,ஜி. பி.வெங்கடேசன், கு. கரிகாலன், நிலவழகன், கோபிநாத், ரகுமான்கான், உதயகுமார்,ஆர்.ஆறுமுகம், திராவிட சாய்சத்யம்,சுல்தான், மல்லியங்குப்பம் ராமு, கே.ஆர்.வெங்கடேசன், சீனு, நீலகண்டன், டி.ஜெயக்குமார், டைலர் பழனி, ஜே.மகேந்திரன், ஈசா, சேகர், பிரபு, வி.கே.எம். விஜயகுமார், பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், பல்வேறு கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திமுக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு குறித்தும், நீட் எதிர்ப்பு விழிப்புணர்வு குறித்தும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் கன்னியாகுமரி மாவட்டம் வள்ளுவர் சிலை அருகில் துவங்கப்பட்ட திமுக பிரச்சார இருசக்கர வாகன வீரர்கள் 6 நாட்கள் தொடர் பயணத்தின் தொடர்ச்சியாக, திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு வருகை தந்த அண்ணா மண்டல பிரச்சார வாகன வீரர்களை திருவொற்றியூர் தொகுதி கழகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு வழங்கி வரவேற்பு அளிக்கப்பட்டது இந்த நிகழ்வில் பங்கேற்ற திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் அவர்கள் பிரச்சார வாகன வீரர்களுடன் தானும் வாகனம் ஓட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டார் பொதுமக்களுக்கு நீட் தேர்வை எதிர்த்து துண்டு பிரசாரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார் இந்த நிகழ்வில் உடன் இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் ஜோயல் ஐந்தாவது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# பதவி நீக்கத்திற்கு பதிலடி. குடியாத்தம் குமரனின் வீடியோவால் அதிர்ச்சி ஆன ஆளும்கட்சி



வேலூர். நவ.25.

திமுகவின் கொள்கை பரப்பு துணை செயலாளர் பதவியிலிருந்தும், கட்சியின் அடிப்படை உறுப்பினரிலிருந்தும் நீக்கப்பட்ட குடியாத்தம் குமரன் அமைச்சருக்கும், எம்.பி-க்கும் எதிராகவெளியிட்டுள்ளவீடியோ திமுகவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

"எந்த நேரத்தில் கோவணம் அவிழ்த்தீர்கள் இப்படி ஒரு பிள்ளை பிறந்திருக்கிறார்" என்று ஆரம்பத்திலேயே அதிரடியாக தொடங்குகிறது அந்த வீடியோ... அதை வெளியிட்டிருப்பவர் குடியாத்தம் குமரன். வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் உள்ள குமரன் திமுக பேச்சாளர். ஏற்கனவே ஒரு முறை கட்சியிலிருந்து நீக்கப்பட்ட அவர் ஆ.ராசா மூலமாக மீண்டும் கட்சியில் சேர்க்கப்பட்டுதிமுக கொள்கை பரப்பு துணை செயலாளராக இருந்து வந்தார்.

எதிர்கட்சியினருக்கு வலைதளங்கள் வழியாக சொல்லடி கொடுத்து வந்த குமரன், கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாகவும், திமுகவுக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாகவும், அமைச்சர் துரைமுருகனால் கட்சியிலிருந்தும், திமுக அடிப்படை உறுப்பினரில் இருந்தும் 2 நாட்களுக்கு முன் தற்காலிகமாக நீக்கப்பட்டார். இதை தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள வீடியோதான் தற்போது வேலூர் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் உள்ள திமுகவினரை திக்கு முக்காட வைத்துள்ளது. இதனால் வேலூர் மாவட்ட திமுகவில் உரசல் உருவாகியிருக்கிறது.

குடியாத்தம் குமரன் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், திமுக பொதுச்செயலாளரான, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் இதுவரை 30 ஆயிரம் கோடி ரூபாய் மணல் கொள்ளையில் சம்பாதித்து உள்ளதாகவும், "அதற்கான எல்லா ஆதாரங்களையும் வெளியிடுவேன்" என்றும் மிரட்டல் பாணியில் கூறியுள்ளார். "சாப்பாட்டுக்கு வழியின்றி செத்தால் கூட நான் திமுகவை விட்டு செல்ல மாட்டேன்" என்று கூறியுள்ள குடியாத்தம் குமரன், எம்.பி. கதிர் ஆனந்த்(அமைச்சர் துரைமுருகனின் மகன்), "உதயநிதி முதலமைச்சராக ஆகவே முடியாது" என தன்னிடம் கூறியதாகவும், கண்டிப்பாக "எங்களது வாலிப கலைஞன் உதயநிதி முதலமைச்சர் சீட்டில் அமர்வார். அதை பார்த்து விட்டு தான் நான் சாவேன்" என்று கதிர் ஆனந்திற்கு சூளுரைத்துள்ளார். மணலை அப்பனும், மகனும் சேர்ந்து திருடுகிறீர்கள், கொள்ளை அடிக்கிறீர்கள், ஊழல் செய்கிறீர்கள். அதனை கட்சிக்காரர்களுக்கும் பகிர்ந்து அளியுங்கள். மீண்டும் சந்திக்கிறேன்". என்று வீடியோவை முடிக்கிறார்.

இந்த வீடியோ வலைதளங்களில் வைரலாகி திமுகவினரிடையே சலசலப்பை உருவாக்கிஉள்ள நிலையில் ஆளுங்கட்சியை தாண்டி எதிர்கட்சியினரின் கையில் இந்த வீடியோ ஏராளமாக பகிரப்பட்டு வருகிறது. பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இந்த வீடியோ அமைச்சர் துரைமுருகன் ஆதரவாளர்களுக்கும், ஆளுங்கட்சிக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில் அதிமுகவினருக்கு ஆதீத உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# போதை புகையிலை பொருட்கள் விற்பனை செய்தால் காவல்துறைக்கு தகவல் அளிக்கலாம்

**பள்ளிகள் கல்லூரிகள் நுழைவாயில் சுவற்றில் காவல்துறை அறிவிப்பு , காவல்துறை ஆணையர் எச்சரிக்கை**




சென்னை,நவ,25

சென்னை வண்ணாரப்பேட்டை காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா குட்கா, மாவா உள்ளிட்ட போதை வஸ்துக்கள் விற்கப்பட்டால் பொதுமக்கள் காவல் நிலையத்தில் புகார் அளிக்க போலீசார் தங்களது தொலைபேசி எண்களை கல்லூரி, மாநகராட்சி பள்ளி வளாகத்தில் போலீசார் போஸ்டர் அடித்து ஒட்டி வருகின்றனர்.

தமிழகத்தில் போதை பொருட்களை கட்டுப்படுத்த தமிழக அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. வண்ணாரப்பேட்டை காவல் மாவட்டத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா குட்கா மாவ கூல் லீப் கடைகளில் விற்பனை செய்வதை தடுக்க சென்னை புது வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் உள்ள காவலர் சமுதாய நலக் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை அன்று வண்ணாரப்பேட்டை சுற்றுவட்டார பகுதியில் உள்ள டீக்கடை, பெட்டிக்கடை, சிறு வியாபாரிகளுக்கு வண்ணாரப்பேட்டை துணை ஆணையர் சக்திவேல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்

தமிழக அரசு தடை செய்யப்பட்ட மாவா குட்கா ஹான்ஸ் புகையிலை வியாபாரிகள் விற்றால் அவரது வங்கி கணக்குகள் முடக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்படும் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வண்ணாரப்பேட்டை காவல் துணை ஆணையர் சக்திவேல் உத்தரவின் பெயரில் வண்ணாரப்பேட்டை காவல் துறை சரகத்திற்கு உட்பட்ட திருவொற்றியூர், புது வண்ணாரப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரசு கல்லூரி, தனியார் கல்லூரி, மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, ரேஷன் கடை பொதுஇடங்களில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா குட்கா மாவா இவற்றை சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனையாளர்கள் மற்றும் ஏஜெண்டர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பற்றி தகவல்களை வண்ணாரப்பேட்டை காவல் துணை ஆணையர் சக்திவேல் தொலைபேசி எண் 99439 6606 திருவொற்றியூர் உதவி ஆணையர் 98402 4795 திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் முகமது மீரான் 94981 34354 புதுவண்ணாரப்பேட்டை வண்ணாரப்பேட்டை காவல் ஆய்வாளர் 9498148068 இந்த தொலைபேசி என்னில் பொதுமக்கள் தொடர்பு கொண்டு தகவல் அளிக்கலாம் என போலீசார் போஸ்டர் ஒட்டப்பட்டு வருகின்றனர்



காரைக்காலில் தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவின் ஒரு பகுதியாக ஆறாம் நாள் நிகழ்வான நேற்று மகளிர் தின விழா மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் மூலம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு திட்டம் மற்றும் ஆராய்ச்சித்துறையின் இணை இயக்குநர் பாலசுப்ரமணியன் தலைமை தாங்கினார். ஓய்வு பெற்ற நலவழித்துறையின் ஊழியரும் சுதந்திர போராட்ட தியாகியின் மகனுமாகிய இளங்கோவன், கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். விழாவின் சிறப்பு விருந்தினருமாகிய “பாரதி செம்மல் வைஜெயந்தி (தலைவர், காரை பாரதி தமிழ்சங்கம்) கலந்து கொண்டு தேசிய ஒருமைப்பாட்டில் மகளிரின் பங்கு குறித்து அறிய பல கருத்துக்களை எடுத்துரைத்தார். விழாவிற்கு சமூகநலத்துறையின் நல அதிகாரிகள், கிருஷ்ணவேணி, சுந்தரம், அங்கன்வாடி ஊழியர்கள், மற்றும் பொதுமக்கள் சுமார் 60 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இத்துறையின் நலத்திட்ட அதிகாரி (CDPO) இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். துறையின் ஊழியர் வசந்தி நன்றியுரை கூறினார்.

# அரசு பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, நவ,25

தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு 2023. 2024 ஆம் ஆண்டுக்கான மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி தண்டையார்பேட்டை பட்டேல் நகரில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

தமிழக முழுவதும் 246 கோடியே 10 லட்சம் மதிப்பில் 5 லட்சத்து 70 ஆயிரத்து 676 மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது முதல் கட்டமாக இந்த திட்டத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு 200 மாணவ மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

படிப்படியாக தமிழகம் முழுவதும் அரசு பள்ளி அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு வழங்கப்பட உள்ளது இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள். ராஜா கண்ணப்பன். பி கே சேகர்பாபு.செஞ்சி மஸ்தான், சென்னை மாநகர மேயர் பிரியா. துணை மேயர் மகேஷ் குமார். வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி. சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே. எபினேசர். ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி. மாவட்ட செயலாளர் இளைய அருணா. மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன். பகுதி செயலாளர் ஜெபதாஸ் பாண்டியன். லட்சுமணன் மற்றும் துறை செயலாளர்கள் ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள் பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் சிறப்பு சுருக்கு முறை வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி நடைபெற்று வரும் நிலையில் வாக்காளர் பதிவு அதிகாரி ஆர்.ஒ.எக்ஸ், மற்றும் துணை ஆட்சியர் ஜான்சன் தலைமையில் காமராஜர் நிர்வாக வளாகத்தில் பி.எல்.ஒ க்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய துணை ஆட்சியர் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணிகளை விரைந்து முடிக்குமாறும் மேலும் புதியதாக 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை அதிக அளவில் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும் மற்ற விசாரணை பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மேலும் தங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் தங்களது தங்கள் வீட்டிலோ அல்லது அருகிலோ இருக்கும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை கண்டிப்பாக வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். இந்நிகழ்வில் துணை வாக்காளர் பதிவு அதிகாரிகள் செல்லமுத்து மற்றும் மதன்குமார் உடன் இருந்தனர்.

# திருவொற்றியூரில் தி.மு.க. இளைஞரணியின் இருசக்கர வாகன பேரணி நாதஸ்வர மேளத்துடன் மாலை அணிவித்து மலர் தூவிஉற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது



*சென்னை, நவ,25*

*தி.மு.க இளைஞரணியின் 2-வது மாநில மாநாடு வரும் நவம்பர் மாதம் 17-ந்தேதி சேலத்தில் நடைபெற உள்ளது. இளைஞர் அணி மாநில மாநாட்டை ஒட்டி இருசக்கர வாகன பேரணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கன்னியாகுமரியில் தொடங்கி வைத்தார்.*

*தமிழகம் முழுவதும் இந்த இருசக்கர வாகன பேரணிசெல்லும்நிலையில் இன்று திருவொற்றியூர் தேரடி பகுதி வழியாக வந்தது இருசக்கர வாகன பேரணியை திருவொற்றியூர் கிழக்குப் பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் திமு தனியரசு உற்சாக வரவேற்பு அளித்தார்.*

*தி.மு.க இளைஞரணி இருசக்கர வாகன பேரணியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே. பி. சங்கர் இருசக்கர வாகனத்தில் பின்னால் ஹெல்மெட் அணிந்து மணலியில் இருந்து பேரணியாக வந்தனர்*

*இருசக்கர வாகன பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு மாநகராட்சி மண்டல குழு தலைவர் தனியரசு நாதஸ்வரம் மேளம் முழங்க உற்சாக வரவேற்பு அளித்து மாலை அணிவித்து மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.*

*பின்னர் நீட் தேர்வு விலக்கு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் மாநாடு குறித்தும் கடைகளுக்கு சென்று கடைவியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு மாதவரம் சுதர்சனம் எம் எல் ஏ துண்டு பிரசுரங்களை வழங்கினார்.*

*இருசக்கர வாகனத்தில் பேரணியாக சென்றவர்களுக்கு திமுகவைச் சேர்ந்த பெண்கள் மலர் தூவி வழி அனுப்பி வைத்தனர். நிகழ்ச்சியில் மேற்கு பகுதி செயலாளர் வை.ம அருள்தாசன், கிழக்கு பகுதி துணை செயலாளர்கள் ஆர். எஸ் சம்பத், குமார், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி கணேசன், பகுதி அவைத்தலைவர் ஆசைதம்பி, வட்டசெயலாளர் கேபிள் டிவி ராஜா, நந்தி சைலஸ் உள்ளிட்ட கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்*

# மோட்டார் வாகன சாலை வரியை ரத்து செய்க புதுக்கோட்டையில் சிஐடியு ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, நவ.25-

நவம்பர்7-ல்வெளியிடப்பட்ட மோட்டார் வாகன சாலை வரியைரத்துசெய்யவலியுறுத்தி புதுக்கோட்டையில் அனைத்துப் போக்குவரத்து தொழிலாளர் சங்கத்தின் (சிஐடியு) சார்பில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ். ஜகுபரலி, ஏ.முகமதுகனி, கேசாந்தர் ஆகியோர் தலைமை வகித்தனர், கோரிக்கைகளை விளக்கி சிஐடியு மாநிலச் செயலாளர் ஏ.ஸ்ரீதர், மாவட்டத் தலைவர் கே.முகமதலிஜின்னா, பொருளாளர் எஸ். பாலசுப்பிரமணியன், அனைத்துப் போக்குவரத்து ஊழியர் சங்க மாவட்டப் பொதுச் செயலாளர் ஆர்.மணிமாறன், ஆட்டோ சங்கப் பொதுச் செயலாளர் ஆர்.மணிமாறன் மற்றும் நிர்வாகிகள் க.ரெத்தினவேல், எம்.அப்பாஸ் உள்ளிட்டோர் பேசினர்.

நவம்பர் 7-ல் வெளியிடப்பட்ட மோட்டார் வாகன சாலை வரியை ரத்துசெய்ய வேண்டும், பழைய பயணிகள் வாகனம் மற்றும் சரக்கு வாகனத்திற்கான சாலை வரியை காலாண்டு வரியாக செலுத்துவதற்கு உத்தரவிட வேண்டும். ஆயுள் வரியை ரத்துசெய்ய வேண்டும். மோட்டார் வாகன திருத்தச் சட்டம் 2019-ஐ திரும்பப் பெறவேண்டும். டோல்கேட் கட்டண உயர்வைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஆன்லைன் அபராதத்தை கைவிட வேண்டும். இன்சூரன்ஸ், ஒலி பிரதிபலிப்பான் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும், இணையவழிச் சேவையை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தின் போது எழுப்பப்பட்டன.



▶ தென்காசி மாவட்டத்தில் தொடர்ந்து இரண்டு நாட்கள் பெய்த மழையில் மாவட்ட ஆட்சித் தலைவர் பள்ளி, கல்லூரிகளுக்கு ஒரு நாள் விடுமுறை அறிவித்துள்ள நிலையில் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட புன்னையாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளதால் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பள்ளி வளாகத்தில் மழைநீர்சூழ்ந்த தண்ணீரை ஊராட்சி மன்றத் தலைவர் திலகவதி கண்ணன், ஊராட்சி செயலர் தங்கத்துரை இரண்டு நாட்களாக மின்மோட்டார் பொருத்தி தண்ணீரை வெளியேற்றி வருகின்றனர். இதனால் பள்ளி மாணவ, மாணவிகள், ஆசிரியர் பெருமக்கள் நோய் தொற்றில் இருந்து விடுவித்தனர். இந்நிலையில் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் தண்ணீர் சூழ்ந்த பள்ளிகளுக்கு மாவட்ட கல்வித் துறை அதிகாரியிடம் தெரிவித்து விடுமுறை அளிக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# முன்னாள் டிஜிபி மீது அவதூறு வழக்கு : முதல்வர் ஸ்டாலின்



சென்னை, நவ. 25-

தான் சொல்லாத ஒன்றை சொன்னதாக கூறி தன் பெயரில் வாட்ஸ் அப்பில் தவறான தகவல்களை பரப்பி வருவதாக முன்னாள் போலீஸ் ஆதிகாரி மீது குற்றம் சாட்டியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் காவல்துறை இயக்குநரும், அதிமுகவின் முன்னாள் எம்எல்ஏவுமான நட்ராஜ், சமீபத்தில் வாட்ஸ் அப் குழுக்களில் திமுக குறித்து தொடர்ந்து பல்வேறு கருத்துக்களை பதிவிட்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக தற்போதைய முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் குறித்தும் அவ்வப்போது காட்டமான கருத்துக்களை பதிவு செய்து வருகிறார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு, ”இந்துக்கள் வாக்களித்து தான் வெற்றி பெற வேண்டும் என்றால் அப்படிப்பட்ட வெற்றி தேவையில்லை. இந்துக்களின் வாக்கு பெறும் அளவுக்கு திமுக தரம் தாழ்ந்து விடவில்லை” என மு.க.ஸ்டாலின் கூறியதாக அவர் ஒரு தகவலை பதிவிட்டு இருந்தார். இதற்கு திமுகவினர் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

மேலும் இது தொடர்பாக நட்ராஜ் மீது திமுகவினர் சமூக வலைதளங்களில் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்நிலையில் சென்னையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நண்பர் திருமங்கலம் கோபாலின் இல்லத் திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். அவர் பேசும்போது, ”திமுக இளைஞர் அணியின் வளர்ச்சியை பொறுத்துக் கொள்ள முடியாமல் சிலர் தேவையில்லாத பிரச்சாரங்களை செய்து வருகின்றனர். ஓய்வு பெற்ற ஒரு போலீஸ் அதிகாரி அவரது சொந்த வாட்ஸ் ஆப் கணக்கில் ஒரு தகவலை போடுகிறார். அவரின் பெயரை இங்கு சொல்ல விரும்பவில்லை. அவர் மீது வழக்கு தொடுத்துள்ளேன்” என்று தெரிவித்துள்ளார்.

மேலும், “இப்படி விரும்பத்தகாத தகவல்களின் மூலம், திராவிட மாடல் ஆட்சி குறித்து அவதூறு பரப்ப முயல்கின்றனர்” என அவர் தெரிவித்தார். பெயரை முதல்வர் குறிப்பிடாவிட்டாலும், அந்த உயரதிகாரி, முன்னாள் டிஜிபி நட்ராஜ் தான் என திமுகவினர் சமூக வலைதளங்களில் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# கந்தர்வகோட்டையில் தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கம் சார்பில் நீதி கேட்கும் போராட்டம்



கந்தர்வகோட்டை , நவ. 25-

தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கம் சார்பில் தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நீதிகேட்கும் போராட்டம் நடைபெற்றது. கந்தர்வகோட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற போராட்டத்திற்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் குமார் தலைமை வகித்தார், மாவட்ட பொருளாளர் பழனிமலை முன்னிலை வகித்தார்.

போராட்டத்தில் தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த கிராம உதவியாளர் சங்கத்தின் பல வருட கோரிக்கையான 14 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி தமிழ்நாடு முதலமைச்சருக்கு போராட்ட அறிக்கையாக தெரிவிக்கப்பட்டு, கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது, போராட்டத்தில் கந்தர்வகோட்டை சங்க வட்டத் தலைவர் துரைராஜ், வட்டச் செயலாளர் பரமசிவம், பாலசுப்பிரமணியம் மற்றும் அனைத்துகிராமஉதவியாளர்கள் கலந்து கொண்டனர், இறுதியாக செல்வராணி நன்றியுரையாற்றினார்.



▶ கடையநல்லூர் நகராட்சியில் 3-வது வார்டு கவுன்சிலர் சுபாராஜேந்திரபிரசாத், இவர் நகராட்சியின் திட்டக்குழு உறுப்பினராகவும் பதவி வகித்து வருகிறார் இவர் சார்ந்த 3-வது வார்டு பகுதி மக்கள் அடிப்படை பணிகளான மழைநீர் வடிகால்,தெருவிளக்கு, மருத்துவ வசதி, ரேஷன் பொருட்கள், முதியோர் உதவித்தொகை, மருத்துவ காப்பீடு திட்டம், குடிநீர் உள்ளிட்டவற்றில் ஏதேனும் பிரச்சினை என்றால் இவர் வார்டு மக்களுக்காக உருவாக்கியுள்ள 3-வதுவார்டு நிறை-குறைகள் என்ற குழுவில் பதிவிட்டால் போதும் அடுத்த சிலமணி நேரங்களில் வாட்ஸ் அப் மூலமாக உடனடியாக தீர்வு கிடைக்க ஏற்பாடு செய்து தருகிறார் நகர் மன்ற உறுப்பினர் சுபா.ராஜேந்திர பிரசாத் பொதுமக்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

# அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் பள்ளி குழந்தைகளுக்கு மருத்துவ முகாம்



அரியலூர், நவ.25-

அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில், பள்ளி குழந்தைகளுக்கு, மத்திய அரசு சுகாதார திட்டத்தின் கீழ், மருத்துவ முகாம் நடைபெற்றது. இது பற்றி பள்ளியின் தலைமை ஆசிரியர் செளந்தர்ராஜன் வெளியிட்ட செய்தி குறிப்பு:

அரியலூர் அருகே, லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையத்தில் தங்கி கல்வி பயிலும், ஏழை, எளிய, மாணவ, மாணவிகளின் நலன் கருதி, ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய காரியக்ரம் என்கிற தேசிய பள்ளி சிறார் மருத்துவ நலத்திட்டத்தின்கீழ், நடமாடும் சுகாதாரக் குழுக்கள் மூலமாக, கல்வி நிலைய வளாகத்திலேயே மருத்துவ பரிசோதனை செய்து, சிகிச்சை அளிக்கப்பட்டது.

கடுகூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் பொன்னி, டாக்டர் தயாளன், மருந்தாளுநர்கள் சுதந்திரக்கொடி, சுதா, பகுதி நேர சுகாதார செவிலியர்கள் தமிழரசி, கவிதா ஆகியோர் கலந்து கொண்டு, மாணவ, மாணவியர்களுக்கு, மருத்துவ ஆலோசனைகளும் மருந்து, மாத்திரைகளும் வழங்கினர். தன் சுத்தம், சுற்றுப்புற சுகாதாரம், மழைக்கால நோய்கள் குறித்த ஆலோசனைகளும், பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன, இத்திட்டத்தின்கீழ், 245 மாணவ, மாணவிகள் பயனடைந்தனர். இம்மருத்துவ முகாமில், பள்ளி ஆசிரியர்கள், வார்டன்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# கீரனூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் புதிய வகுப்பறைகளுக்கு எம்எல்ஏ சின்னதுரை அடிக்கல் நாட்டினார்



புதுக்கோட்டை, நவ.25-

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வகுப்பறைகளுக்கு கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரை நேற்று அடிக்கல் நாட்டினார்.

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின்கீழ் ரூபாய் 148.26 லட்சம் மதிப்பீட்டில் 7 புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடம் கட்டுவதற்கு கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.சின்னதுரை நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில், திமுக வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், ஒன்றியக்குழுத் தலைவர் பாண்டிச்செல்வி போஸ், மாவட்டக் கவுன்சிலர் செல்வம், பேரூராட்சித் தலைவர் ஜெயமீரா, திமுக ஒன்றியச் செயலாளர்கள் வெங்கடாசலம், சண்முகம், சேட், சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதர், ஒன்றியச் செயலாளர் கலைச்செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# வைகை அணையில் இருந்து 4,000 கனஅடி நீர் திறப்பு : கரையோர மக்களுக்கு எச்சரிக்கை



ஆண்டிபட்டி : நவ. 25,

சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட பூர்வீகப் பாசன பகுதிகளுக்காக வைகை அணையில் இருந்து விநாடிக்கு 4 ஆயிரம் கன அடி வீதம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், வைகை ஆற்றில் யாரும்இறங்கவோ,கடக்கவோ முயற்சிக்க வேண்டாம் என பொதுப்பணித் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பகுதியில் உள்ள 71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் தற்போது 67.50 அடியாக உள்ளது. அணையில் இருந்து ஏற்கெனவே மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட பூர்வீகப் பாசனப் பகுதி விவசாயிகள் தங்கள் பகுதிக்கும் தண்ணீர் திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதைத் தொடர்ந்து சிவகங்கை, ராமநாதபுரம் வைகை பூர்வீகப் பாசன 1,2 மற்றும் 3 பகுதிகளுக்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதன்படி நேற்று முன்தினம் வியாழக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. வரும் டிச. 8-ம் தேதி வரை 3 கட்டங்களாக தண்ணீர் வழங்கப்பட உள்ளது. முதற்கட்டமாக சிவகங்கை, ராமநாதபுரம் வைகை பூர்வீகப் பகுதி 3-க்கு வியாழக்கிழமை முதல் விநாடிக்கு 4 ஆயிரம் கனஅடி வீதம் ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது.

ஏற்கெனவே வைகை அணையில் இருந்து பாசனத்துக்காக விநாடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது கூடுதலாக 4 ஆயிரம் கன அடியும் சேர்த்து மொத்தமாக 6 ஆயிரத்து 99 கனஅடி தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. இதில் கால்வாய் வழியே 2 ஆயிரத்து 30 கனஅடி நீரும், ஆற்றின் வழியே 4 ஆயிரத்து 69 கனஅடி நீரும் வெளியேற்றப்படுகிறது. நீர்வரத்தைப் பொருத்தளவில் புதன்கிழமை விநாடிக்கு ஆயிரத்து 690 கனஅடி நீர் இருந்தது. மழையால் வியாழக்கிழமை 2 ஆயிரத்து 477 கன அடியாக அதிகரித்தது

அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் வைகை ஆற்றில் யாரும் இறங்கவோ, கடக்கவோ முயற்சிக்க வேண்டாம் என்று பொதுப்பணித் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். பெரியாறு அணையின் நீர்மட்டம் 134 அடியாக உள்ளது. நீர்வரத்து 4 ஆயிரத்து 118 கன அடியாகவும், நீர்வெளியேற்றம் ஆயிரம் கன அடியாகவும் உள்ளது.

# சங்கரன்கோவிலில் வடக்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்து இயக்கம்




சங்கரன்கோவில். நவ. 25-

தென்காசி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கம் நடந்தது, நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு அமைப்பாளர் கிப்டசன் தலைமை வகித்தார், மாவட்ட பொருளாளர் சரவணன் ,மாவட்ட துணைச் செயலாளர் புனிதா, நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன் ,நகர செயலாளர் பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ, திமுக மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் பாலா, திமுக முன்னாள் அமைச்சரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான தங்கவேலு ஆகியோர் கலந்து கொண்டு நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்து பொதுமக்களிடம் கையெழுத்து பெற்றனர், தொடர்ந்து வணிக வளாகங்கள், தினசரி காய்கறி மார்க்கெட், பள்ளிவாசல், பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் நீட் தேர்வு எதிர்த்து கையெழுத்து பெறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் கேஎஸ்எஸ் மாரியப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சரவணன், கார்த்தி, ராஜ் ,ராஜராஜன், அன்சாரி, மணிகண்டன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சிவாஜி, ரெஜிகலா, சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வீமராஜ், மகேஷ் பாண்டியன் , சங்கரேஸ்வரி, வாசுதேவநல்லூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் சுவாமிநாதன், ரஜினிகாந்த் சங்கரேஸ்வரி, நகர தகவல் தொழில்நுட்ப அணிநிர்வாகிகள் கணேஷ் சங்கர்ராஜ், தொண்டரணி அப்பாஸ் , இளைஞர் அணி வீராசாமி மேல நீலிதநல்லூர் தெற்கு ஒன்றிய தொண்டரணி மணி, ஜலால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி மாணவி தேசிய அளவிலான குத்துச்சண்டை போட்டிக்கு தேர்வு



திருமயம் , நவ.25-

67வது தேசிய அளவிலான குத்துச்சண்டை போட்டிக்கு புதுக்கோட்டை மாவட்டம் நச்சாந்துப்பட்டி இராமநாதன் செட்டியார் மேல் நிலைப்பள்ளி மாணவி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை மற்றும் இந்திய பள்ளிகளுக்கான விளையாட்டு குழுமம் சார்பில் தேசிய அளவிலான குத்துச்சண்டை போட்டிக்கான தெரிவுப்போட்டி நவம்பர் 14ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை ஈரோடு மாவட்டத்தில் உள்ள பாரதிதாசன் கலை மற்றும் அறிவியியல் கல்லூரி எலிசிப்பேட்டையில் நடைபெற்றது. இதில் 19 வயதிற்கு உட்பட்டோர்கான மாணவிகளுக்கான குத்துச்சண்டை போட்டியில் 50-52 கிலோ எடை பிரிவில் புதுக்கோட்டை மாவட்டம் நச்சாந்துப்பட்டி இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி வெ.முகிலா கலந்து கொண்டு வெற்றி பெற்றார். இம் மாணவி தேசிய அளவிலான குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்று டெல்லியில் நடைபெறவுள்ள தேசிய அளவிலான குத்துச்சண்டை போட்டியில் தமிழக அணிசார்பில் கலந்து கொள்ள உள்ளார்.

இதனை தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவியை புதுக்கோட்டை முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், உடற்கல்வி ஆய்வாளர், பள்ளி செயலர், தலைமை ஆசிரியர் மற்றும் உடற்கல்வி இயக்குனர் ஆகியோர் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# கந்தர்வகோட்டை அருகே மஞ்சப்பேட்டையில் பகுதிநேர அங்காடியை எம்எல்ஏ சின்னதுரை தொடங்கி வைத்தார்



புதுக்கோட்டை, நவ.25-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் மஞ்சப்பேட்டை கிராமத்தில் பகுதிநேர அங்காடியை சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரை வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

கந்தர்வகோட்டை ஒன்றியம் மஞ்சப்பேட்டை கிராமத்தில் பகுதிநேர அங்காடி திறக்க வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாளையக்கோரிக்கையாக இருந்துவந்தது, கடந்த சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்ட எம். சின்னதுரை, தான் வெற்றி பெற்றால் பகுதிநேர அங்காடி திறக்க நடவடிக்கை எடுப்பேன் என உறுதியளித்தார், இதனைத் தொடர்ந்து நேற்று மஞ்சப்பேட்டையில் பகுதிநேர அங்காடி திறக்கப்பட்டது, அங்காடியை திறந்து வைத்து கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரை பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், திமுக வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன், சிபிஎம் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் ஏ.ராமையன், திமுக ஒன்றியச் செயலாளர் மா.தமிழய்யா, சிபிஎம் ஒன்றியச் செயலாளர் கே.சித்திரைவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அறந்தாங்கி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் முன்பாக போக்குவரத்து தொழிலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்



அறந்தாங்கி, நவ.25-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் முன்பாக மோட்டார் தொழில்களை தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய, மாநில அரசுகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு பொது சாலை போக்குவரத்து மாவட்டத் தலைவர் ரத்தினவேல் தலைமை வகித்தார், நவம்பர் 7ஆம் தேதி வெளியிடப்பட்ட மோட்டார் வாகன சாலை வரியை ரத்து செய்ய வேண்டும், அக்ரிகேட்டர் விதிகளை உடனடியாக வகுக்க வேண்டும், ஆன்லைன் அபராதத்தை கைவிட வேண்டும், போக்குவரத்து ஆய்வாளர், காவல்துறை மாமூல் வாங்குவதை தடுக்க வேண்டும், 2019 மோட்டார் வாகன சட்டத்தை கைவிட வேண்டும், இணைய வழி சேவையை உடன் துவக்க வேண்டும், போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சிஐடியு மாவட்டத் தலைவர் முகமது அலி ஜின்னா, சிஐடியு நிர்வாகிகள் வழக்கறிஞர் அலாவுதீன், சங்கர் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அறந்தாங்கி, கீரமங்கலம், மணமேல்குடி கார், வேன், டாட்டா ஏசி வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் கலந்து கொண்டு கோசம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.




▶ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வைத்து விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 216 மனுக்களுக்கு, 15 நாட்களுக்குள் விரிவான மற்றும் விவசாயிகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய பதிலை வழங்குமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஆஸ்திரேலிய அணி என்னை ஏமாற்றிவிட்டது சொல்கிறார் ரவிச்சந்திரன் அஸ்வின்



**சென்னை : நவ. 25,**

**உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலிய அணி தன்னை ஏமாற்றி விட்டதாக ரவிச்சந்திரன் அஸ்வின் தனது யூடியூப் சானலில் கூறியுள்ளார்.**

ஐசிசி உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வி அடைந்து பட்டம் வெல்லும் வாய்ப்பை இழந்தது. இந்திய அணியின் தோல்வி கோடிக்கணக்கான ரசிகர்களின் மனதை நொறுங்க செய்தது. இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் தனது யூடியூப் சானலில் கூறியிருப்பதாவது:

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கான அனைத்து போட்டிகளுக்கும் ராகுல்திராவிட், ரோஹித்சர்மா அருமையான திட்டங்கள் வகுத்துவைத்திருந்தனர். எந்தெந்த வீரர்கள் எந்த ஆட்டங்களில் இடம் பெற வேண்டும் என தெளிவான திட்டங்கள் கொண்டிருந்தனர். இறுதிப்போட்டியில் ரோஹித் சர்மா சதம் அடித்திருக்கலாம் என அனைவரும் கூறுகிறார்கள்.

அவர், சுயநலம் இல்லாமல் விளையாடினார். இந்த உலகக் கோப்பை தொடர் முழுவதுமே அவரது எண்ணம் அணிக்கு விரைவான தொடக்கம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதாக மட்டுமே இருந்தது. எப்படி சதம் அடிக்க வேண்டும் என ரோஹித் சர்மாவுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை அவர், பல்வேறு ஆட்டங்களில் செய்துள்ளார்.

ஸ்ரேயஸ் ஐயர் விக்கெட் முக்கியமான கட்டத்தில் சரிந்தது. ஏனெனில் உலகக் கோப்பை தொடர் முழுவதுமே ரோஹித் சர்மா அல்லது ஷுப்மன் கில் அமைத்துக் கொடுத்த தொடக்கங்களை பல்வேறு முறை ஸ்ரேயஸ் ஐயர் முன்னெடுத்துச் சென்றுள்ளார். சுழற்பந்து வீச்சில் அதிக ரன்கள் எடுக்கக்கூடியவர். ஃபுல் ஷாட்டில் அவர், அதிக வேலைகளும் செய்துள்ளார். இலக்கை துரத்தும் போது ஸ்ரேயஸ் ஐயர் அற்புதமாக செயல்படக்கூடியவர். இறுதிப் போட்டியில் பாட் கம்மின்ஸிடம் அவர், விரைவாக வீழ்ந்தது கடும் பின்னடைவை கொடுத்தது.

இருப்பினும் ஆஸ்திரேலியா அபாரமாக விளையாடியது. அவர்களின் உத்திகளைக் கண்டு நான் அதிர்ச்சியடைந்தேன். ஆஸ்திரேலியா என்னை தனிப்பட்ட முறையில் ஏமாற்றிவிட்டது. ஏனெனில் அவர்களின் வரலாறு பார்க்கையில், பெரிய அளவிலான இறுதிப் போட்டியில் டாஸ் வென்றபிறகு பேட்டிங்கே செய்திருந்தனர். டாஸ் போடுவதற்கு முன்பே ஆஸ்திரேலிய அணி பேட்டிங்கையே முதலில் தேர்வு செய்ய வேண்டும் என கடவுளிடம் வேண்டிக்கொண்டிருந்தேன்.

ஏனெனில் அகமதாபாத் ஆடுகளத்துக்கு பயன்படுத்தப்பட்ட கருப்பு மண், ஒடிசாவில் இருந்து கொண்டுவரப்பட்டது. மற்ற கருப்பு மண் ஆடுகளங்களில் பந்துகள் முட்டு அளவு உயரத்துக்கு எழுந்து வரும். ஆனால் இந்த மண்ணில் பந்துகள் குதிகால் உயரத்துக்கு மேல் எழுந்து வராது. பந்துகள் எகிறி வருவது குறைவாகவே இருக்கும். அதேவேளையில் ஆடுகளம் சிதையாது. ஏனெனில் இந்த வகையிலான மண் ஈரப்பதத்தை வெளியே விடாது.

போட்டியின் நடுவே ஆடுகளத்தை சென்று பார்வையிட்டேன். அப்போது ஆஸ்திரேலிய அணியின் தேர்வுக்குழு தலைவர் ஜார்ஜ் பெய்லியை சந்தித்து பேசினேன். எப்போதும் நீங்கள் டாஸ் வென்றால் பேட்டிங்கை தானே தேர்வு செய்வீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர், நாங்கள் ஐபிஎல் தொடரில் விளையாடி உள்ளோம். இருதரப்பு தொடர்களிலும் நீண்ட காலம் விளையாடி உள்ளோம். இந்த அனுபவங்களின் அடிப்படையில் சிவப்பு மண் ஆடுகளம் சிதையும். ஆனால் கருப்பு மண் ஆடுகளம் மின்னொளியின் கீழ் பேட் செய்வதற்கு சிறப்பாக இருக்கும்.

சிவப்புமண் ஆடுகளத்தில் பனிப்பொழிவு தாக்கத்தை ஏற்படுத்தாது. கருப்பு மண் ஆடுகளத்தில் பிற்பகலில் பந்துகள் திரும்பும். ஆனால் இரவு நேரத்தில் ஆடுகளம் சிமெண்ட் தளம் போன்று மாறிவிடும் என்று பதில் கூறினார். இதை கேட்டதும் நான் வாயடைத்து போனேன். அந்த அளவுக்கு அவர்கள், ஆடுகளத்தை புரிந்து வைத்துள்ளனர். அதேவேளையில் பாட் கம்மின்ஸ் திட்டங்களை களத்தில் செயல்படுத்திய விதம் பாராட்டக்கூடியது.

உலகக் கோப்பையில் தொடக்க போட்டிகளில் கம்மின்ஸ் பந்து வீச்சில் கஷ்டப்பட்டார். ஆனால் கடைசி 4 முதல் 5 போட்டிகளில் அவர், மீண்டு வந்தார். 50 சதவீத பந்துகளை கட்டர்களாக வீசினார். இறுதிப் போட்டியில் அவர், ஆஃப் திசையில் 4 பேரையும், லெக் திசையில் 5 பேரையும் என நிறுத்தி சுழற்பந்து வீச்சுக்கான பீல்டிங்கை அமைத்து பந்து வீசினார். 10 ஓவர்களில் 3 பந்துகளை மட்டுமே அவர், ஸ்டெம்புகளுக்கு முன்னால் 6 மீட்டர் மார்க்கில் வீசினார். தனது 10 ஓவர்களிலும் அவர், மிட் ஆஃப் திசையில் பீல்டரை நிறுத்தவில்லை.

பெரும்பாலான நேரங்களில் இந்திய பேட்ஸ்மேன்களை அவர், டிரைவ் செய்யவிடவில்லை. எவ்வளவுதான் பீல்டிங்கை சிறப்பாக அமைத்தாலும் பேட்ஸ்மேன்கள் ஒரு சில பவுண்டரிகளை அடிப்பார்கள். ஆனால் அதை ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சாளர்களும், பீல்டிங் வியூகமும் அனுமதிக்கவில்லை. ஒட்டுமொத்தமாக அவர்கள் திட்டங்களை சரியாக களத்தில் அமல்படுத்தினர்.

துரத்தலின் போது ஆஸ்திரேலிய அணி விரைவாக 3 விக்கெட்களை இழந்த போதுகூட நம்பிக்கை இருந்தது. ஆனால் இறுதியில் வருத்தத்துடன் தொடரை முடித்தோம். நாங்கள் மட்டும் அல்ல கோடிக்கணக்கான ரசிகர்களும் மனம் உடைந்துவிட்டனர். இறுதிப் போட்டியை தவிர்த்து இந்த தொடர்முழுவதுமேசிறப்பாகவே விளையாடினோம். நினைவில் வைத்துக்கொள்வதற்கு ஏராளமான நல்ல விஷயங்கள் உள்ளன. இவ்வாறு ரவிச்சந்திரன் அஸ்வின் கூறியுள்ளார்.

# தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் வேலவன் செந்தில்குமார், அனாஹத் பட்டம் வென்று அசத்தல்

**சென்னை : நவ. 25,**

**79-வது தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் சென்னையில் கடந்த 17-ம் தேதி தொடங்கியது. இதன் இறுதி நாளான நேற்று முன்தினம் வியாழக்கிழமை மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் 15 வயதான அனாஹத் சிங், 27 வயதான தன்வி கன்னாவை எதிர்த்து விளையாடினார்.**

இதில் முதல் செட்டில் கடுமையாக போராடிய போதிலும் அனாஹத் சிங் 9-11 என நெருக்கமாக தோல்வி அடைந்தார். 2-வது செட்டை அனாஹத் சிங் 11-4 தன்வசப்படுத்தினார். அப்போது திடீரென தன்வி கன்னா காயம் அடைந்தார்.

இதைத் தொடர்ந்து அவர், போட்டியில் இருந்து விலகினார். இதனால் அனாஹத் சிங் சாம்பியன் பட்டம் வென்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் கடந்த 23 வருடங்களுக்குப் பிறகு தேசிய சீனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் பட்டம் வென்ற இளம் வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார் அனாஹத் சிங்.

இந்த வகையில் கடந்த 2000-ம் ஆண்டு ஜோஷ்னா சின்னப்பா, 14 வயதில் சாம்பியன் பட்டம் வென்றதே சாதனையாக உள்ளது. சீனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் 2-வது முறையாக பங்கேற்ற நிலையில் அனாஹத் சிங் வாகை சூடியுள்ளார். கடந்த ஆண்டு இறுதிப் போட்டியில் அவர், ஜோஷ்னா சின்னப்பாவிடம் தோல்வி அடைந்திருந்தார்.



ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் அபய்சிங் - வேலவன் செந்தில்குமார் மோதினார்கள். இதில் தமிழகத்தைச் சேர்ந்த வேலவன் செந்தில்குமார் 12-10, 11-3, 12-10 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.

# டேவிஸ் கோப்பை டென்னிஸ் அரை இறுதி சுற்றுக்கு முன்னேறியது ஆஸ்திரேலியா

**மலாகா : நவ. 25,**

**டேவிஸ் கோப்பை டென்னிஸ் தொடரின் கால் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் செக்குடியரசை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது.**

ஸ்பெயின் நாட்டின் மலாகா நகரில் நடைபெற்ற இந்த மோதலில் முதலில் நடைபெற்ற ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் செக்குடியரசின் தாமஸ் மச்சாக், ஆஸ்திரேலியாவின் ஜோர்டான் தாம்சனை எதிர்கொண்டார். இதில் தாமஸ் மச்சாக் 6-4, 7-5 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றார். இதனால் செக்குடியரசு 1-0 என முன்னிலை பெற்றது. 2-வது நடைபெற்ற ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் ஆஸ்திரேலியா பதிலடி கொடுத்தது.

அந்த அணியின் வீரர் அலெக்ஸ் டி மினார் 4-6, 7-6 (7-2), 7-5 என்ற செட் கணக்கில் போராடி செக்குடியரசின் ஜிரி லெஹெக்காவை தோற்கடித்தார். இதனால் ஆட்டம் 1-1 என சமநிலையை அடைந்தது. கடைசியாக நடைபெற்ற இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன், மேக்ஸ் புர்செல் ஜோடியானது செக்குடியரசின் ஜாகுப் மென்சிக், ஆடம் பாவ்லாசெக் ஜோடியை எதிர்கொண்டது.



இதில் மேத்யூ எப்டன், மேக்ஸ் புர்செல் ஜோடி 6-4, 7-5 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றது. முடிவில் ஆஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் செக் குடியரசை வீழ்த்தி அரை இறுதி சுற்றுக்கு முன்னேறியது.

## புரோ கபடி லீக் 2ம் தேதி தொடக்கம்

# இளம் ரைடர்கள் சிறப்பாக ஆடுவர் பெங்கால் கேப்டன் மணீந்தர்சிங் பேட்டி




**மும்பை : நவ. 25,**

**12 அணிகள் பங்கேற்கும் 10வது புரோ கபடி லீக் தொடர் வரும் 2ம் தேதி தொடங்குகிறது. அகமதாபாத்தில் நடைபெறும் முதல் போட்டியில் குஜராத் ஜெயன்ட்ஸ்-தெலுங்கு டைட்டன்ஸ் அணிகள் மோதுகின்றன.**

லீக் சுற்று போட்டிகள் அடுத்த ஆண்டு பிப்ரவரி 21ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதனிடையே 10வது சீசனுக்காக அனைத்து அணிகளும் தயாராகி வருகின்றன. இதனிடையே பெங்கால் வாரியர்ஸ் கேப்டனாக மணீந்தர் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். பஞ்சாப்பை சேர்ந்த மணீந்தர் சிங் 2017 முதல் பெங்கால் அணிக்காக ஆடி வரும் நிலையில் அவரின் தலைமையில் 2019ம் ஆண்டு பெங்கால் அணி சாம்பியன் பட்டம் வென்றது. இந்த முறை அவரை 2.12 கோடி ரூபாய்க்கு பெங்கால் அணி ஏலம் எடுத்துள்ளது.

நடப்பு சீசனுக்காக தீவிர பயிற்சியில் ஈடுபட்ட அவர் கூறியதாவது: நான் சில ஆண்டுகளாக பெங்கால் வாரியர்ஸ் அணியுடன் உள்ளேன். இதனால் பெங்கால் எனது 2வது வீடு ஆகிவிட்டது. மீண்டும் பெங்கால் அணியுடன் இணைந்தது ஆச்சரியமாக இருக்கிறது. அணி ஏற்கனவே ஒரு செட் கலவையைப் பெற்றுள்ளது, அது நிச்சயமாக நன்மையைத் தரும். நிதின் மற்றும் பிரசாந்த் போன்ற புதிய திறமையான ரைடர்கள் உள்ளனர். ஸ்ரீகாந்த் நல்ல ஃபார்மில் இருக்கிறார். ரெய்டு செய்யும்போது தாக்குதலில் கூடுதல் பரிமாணம் கொடுப்பார். இளம் ரைடர்கள் சிறப்பாக ஆடுவார்கள் எதிர்பார்க்கிறேன்.

நாங்கள் இப்போது கோப்பையைப் பற்றி சிந்திக்கவில்லை. சீசனை சிறப்பாக தொடங்குவதில் தான் கவனம் உள்ளது. இந்த சீசனில் அணி காயமில்லாமல் இருக்கும் என்று நம்புகிறோம், ஒவ்வொரு ஆட்டத்தையும் ஒரே மாதிரியான விளையாட்டுத் திட்டத்துடன் அணுகுவோம், என்றார். பெங்கால் தனது முதல் போட்டியில் டிச. 4ம் தேதி பெங்களூரு புல்ஸ் அணியுடன் மோதுகிறது.

# "அப்பா வேற, நான் வேற" நாயகனாக அறிமுகமாகும் விஜய் சேதுபதி மகன்



**சென்னை : நவ. 25,**

**விஜய் சேதுபதி மகன் சூர்யா 'ஃபீனிக்ஸ் வீழான்' படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார். இப்படத்தின் பூஜை இன்று சென்னையில் நடைபெற்றது.**

விஜய் சேதுபதி நடித்த 'நானும் ரவுடி தான்', 'சிந்துபாத்' படங்களில் அவரது மகன் சூர்யா சின்ன சின்ன கதாபாத்திரங்களில் நடித்திருந்தார். தற்போது அவர் 'ஃபீனிக்ஸ் வீழான்' என்ற படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமாகிறார். இந்தப் படத்தை பிரபல சண்டை இயக்குநர் அனல் அரசு இயக்குகிறார். ஆக்ஷன் - ஸ்போர்ட்ஸ் ட்ராமாவாக உருவாகும் இப்படத்துக்கு சாம். சி.எஸ் இசையமைக்கிறார்.

இந்நிலையில், இப்படத்தின் பூஜை நேற்று சென்னையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று செய்தியாளர்களிடம் பேசிய சூர்யா விஜய்சேதுபதி, "ஒருநாள் அப்பா நடிக்கும் படத்தின் ஷூட்டிங்ஸ்பாட்டுக்கு அவருக்கு சாப்பாடு கொடுக்க போனேன். அப்போது அப்படி அனல் அரசு மாஸ்டர் கண்ணில் பட்டுவிட்டேன். அதன்பிறகு இந்தப் படம் அமைந்தது. எனக்கு சண்டைக் காட்சிகள் கொண்ட ஒரு நல்லப் படத்தில் நடிக்க வேண்டும் என்பது ஆசை.

அப்பா வேற, நான் வேற. அவருடைய பெயரை நான் எந்த இடத்திலும் உபயோகப்படுத்தக் கூடாது என நினைக்கிறேன். அதனால்தான், படத்தில் கூட சூர்யா என என் பெயரை மட்டும்தான் பயன்படுத்தச் சொன்னேன். இப்போது காலேஜில் இரண்டாம் வருடம் படித்துக்கொண்டிருக்கிறேன். அடுத்து அப்பாவோடு சேர்ந்து நடிப்பேனா என்றுக் கேட்டால் அதைப் போக போக பார்த்துக் கொள்ளலாம். அப்பா மலேசியாவில் ஷூட்டிங்கில் உள்ளதால் இங்கு கலந்துகொள்ள முடியவில்லை. காலையில் எங்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்" என்றார்.

# ஆலகாலம் பர்ஸ்ட் லுக் வெளியீடு



**சென்னை : நவ. 25,**

**ஜெய் புரொடக்‌ஷன்ஸ் தயாரிப்பில் ஜெயகி இயக்கியுள்ள படம், 'ஆலகாலம்'. சமூகத்திலுள்ள மிகப்பெரிய பிரச்னைகளையும், உண்மைச்சம்பவங்களையும் மையப்படுத்தி இப்படம் யதார்த்தமான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.**

விரைவில் திரைக்கு வரும் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். தாயின் கனவை நனவாக்க முயற்சிக்கும் இளைஞனின் வாழ்க்கை சமூகத்தால் சீரழிகிறது.

அதிலிருந்து அவனை மீட்பதற்காக அவனுடைய தாயும், காதலியும் போராடுகின்றனர். இறுதியில் அந்த இளைஞன் மீண்டானா? வாழ்க்கையில் ஜெயித்தானா? தாயின் கனவு நிறைவேறியதா என்பது படத்தின் கதை. தாய் வேடத்தில் ஈஸ்வரி ராவ் நடித்துள்ளார். ஜெயகி, சாந்தினி ஜோடியாக நடித்துள்ளனர். முக்கிய வேடங்களில் தீபா, தங்கதுரை, சிசர் மனோகர், கோதண்டம் நடித்துள்ளனர். கே.சத்யராஜ் ஒளிப்பதிவு செய்ய, என்.ஆர்.ரகுநந்தன் இசை அமைத்துள்ளார்.

# 80'ஸ் பில்டப் சந்தானம் - கல்யாண் கூட்டணி தந்தது கலகலப்பா, கழுத்தறுப்பா

**சென்னை : நவ. 25,**

**'குலேபகாவலி', 'ஜாக்பாட்' போன்ற காமெடியை மையப்படுத்திய படங்களை கொடுத்த இயக்குநர் கல்யாண், சந்தானத்துடன் இணைந்துள்ள படம் '80ஸ் பில்டப்'. 80களின் நாஸ்டால்ஜியா அம்சங்களைக் கொண்டு ஃபேமிலி என்டர்டெய்னராக விளம்பரப்படுத்தப்பட்ட இப்படம் கலகலப்பை தந்ததா அல்லது கரகரவென கழுத்தை அறுத்ததா என்று பார்க்கலாம்.**

80களில் தீவிர கமல் ரசிகராக இருப்பவர் சந்தானம். ஊரில் பெரிய ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர் அவரது தாத்தா சுந்தர்ராஜன். ஜமீன் குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் ஒரு பழங்கால கத்தியை திருட திட்டம் போடுகிறது மன்சூர் அலிகான், மனோபாலா, மொட்டை ராஜேந்திரன் கும்பல். அந்த கத்தியை திருட வரும்போது அவர்களிடமிருந்து வைரங்களை கற்கண்டு என நினைத்து விழுங்கி, எதிர்பாராதவிதமாக இறந்து போகிறார் சுந்தர்ராஜன். இறந்துபோன சுந்தர்ராஜனின் உடலிலிருந்து வைரத்தை எப்படியாவது எடுக்க வேண்டும் என்று சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கிறது அந்த திருட்டு கும்பல். சந்தானத்தின் தூரத்து உறவாக சாவு வீட்டுக்கு வரும் ராதிகா ப்ரீத்தி மீது கண்டதும் காதலில் விழுகிறார் சந்தானம். தாத்தாவின் உடலை அடக்கம் செய்வதற்கும் தனது காதல் வலையில் நாயகியை விழ வைப்பதாக தனது தங்கையிடம் சபதம் போடுகிறார். சந்தானம் தனது சபதத்தில் ஜெயித்தாரா? மன்சூர் அலிகான் கும்பலுக்கு வைரம் மீண்டும் கிடைத்தா என்பதே '80 பில்டப்' படத்தின் திரைக்கதை.



இப்போது வரும் படங்களில் கதைக்கு தொடர்பு இருக்கிறதோ இல்லையோ ஆடியன்ஸின் நாஸ்டால்ஜியாவை தூண்டும் விதமாக ஏதேனும் ஒரு பழைய பாடலை இடம்பெறச் செய்வது எழுதப்படாத விதியாகிவிட்டது. அதே நினைப்பில் இந்தப் படத்துக்கு 80களில் நடப்பது போன்ற கதைக்களத்தை இயக்குநர் தேர்வு செய்தாரா என்று தெரியவில்லை. படத்துக்கும் 80களின் பின்னணிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சமகாலத்தில் ஏதேனும் ஒரு கிராமத்தில் நடப்பது போன்று படத்தை எடுத்திருந்தாலும் எந்த மாற்றமும் இருந்திருக்காது.

சரி, சந்தானம் படமென்றதும், ஆடியன்ஸ் எதிர்பார்த்து வரும் காமெடி காட்சிகளாவது சிரிப்பது போல இருக்கிறதா என்று கேட்டால், அங்கொன்றும் இங்கொன்றுமாக சில காட்சிகள் கைகொடுத்திருக்கிறதே தவிர, பெரும்பாலானவை காமெடி என்ற பெயரில் கழுத்தறுக்கின்றன. நேரடியாக கதைக்குள் செல்லாமல் தேவையற்ற காட்சிகளால் நிரப்பப்பட்டு, 20 நிமிடங்களுக்குப் பிறகே மெயின் கதைக்குள்ளேயே படம் நுழைகிறது. அதுவரை வரும் அண்ணன்-தங்கச்சி சண்டை, சந்தானத்துக்கும் திரையரங்க அதிபராக வருபவருக்கும் இடையே நடக்கும் சண்டை என தொடர்பில்லாமல் செல்கிறது. சுந்தர்ராஜனின் மரணத்துக்குப் பிறகு படத்தை ஓரளவு உட்கார்ந்து பார்க்க வைப்பதற்கு காரணம் ஆடுகளம் நரேனும், 'மஞ்சக்கிளி'யாக வரும் ஆனந்தராஜும் வரும் காட்சிகள்தான்.

சந்தானம் வழக்கமாக இதுவரை என்ன செய்தாரா அதையேதான் இதிலும் செய்திருக்கிறார். சொல்லப்போனால் தனது பலமான ஒன்லைனர்களுக்காக கூட அவர் இதில் பெரிதாக மெனக்கெடவில்லை என்று தோன்றுகிறது. நாயகியாக வரும் ராதிகா ப்ரீத்தி, சுந்தர்ராஜன், மன்சூர் அலிகான், மொட்டை ராஜேந்திரன், மனோபாலா, மயில்சாமி ஆகியோர் ஒரு காமெடி படத்துக்கு தேவையானதை கொடுத்துள்ளனர். கே.எஸ். ரவிக்குமார், முனிஷ்காந்த், ரெடின் கிங்ஸ்லி படம் முழுக்க வந்தாலும் அவர்களுக்கு சொல்லிக் கொள்ளும்படி ஒரு காட்சியும் இல்லை. சந்தானத்தின் தங்கையாக வருபவர் மிகை நடிப்பில் எரிச்சலூட்டுகிறார்.

'ஆடுகளம்' நரேன் - ஆனந்தராஜ் கூட்டணிதான் பல இடங்களில் படத்தை காப்பாற்றுகிறது. நரேனுக்கு இதுவரை இல்லாத புதிய கதாபாத்திரம். படம் முழுக்க குடிகாரராக வரும் அவர் பேசும் வசனங்களும், பெண்வேடத்தில் வரும் ஆனந்தராஜுடன் சேர்ந்து அவர் லூட்டிகளும் அதகளம். இந்த இருவர் கூட்டணி வரும் காட்சிகள் மட்டும் படத்தில் நினைவில் கொள்ளத்தக்கவையாக இருக்கின்றன.

ஜிப்ரான் இசையில் 'ஒய்யாரி' பாடல் மட்டுமே மனதில் நிற்கிறது. ஏற்கெனவே அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் திரைக்கதையை இன்னும் ஐந்தடி கீழ இறக்குவிடுகின்றன பாடல்கள். பின்னணி இசையில் சொல்லிக் கொள்ளும்படி ஒன்றும் இல்லை. ஜாகோப் ரத்தினராஜின் ஒளிப்பதிவு படத்தை கலர்ஃபுல் ஆக வைத்திருக்க உதவியுள்ளது. பாடல் காட்சிகளில் வரும் சிஜி படு சொதப்பல்.

காமெடி படத்தில் லாஜிக் பார்க்கக் கூடாது என்ற லாஜிக்கே இல்லாத வாதத்தின்படி, மூளையை கழட்டி வைத்துவிட்டு படத்தை பார்த்தாலும், படத்தில் உள்ள அபத்தங்கள் அப்பட்டமாக பல்லிளிக்கின்றன. உதாரணமாக சாவு வீட்டில் சடலத்தை வைத்துக் கொண்டு செய்யும் காட்சிகள், பிணத்தை அலேக்காக தூக்கிக் கொண்டு மைதானத்துக்குச் சென்று சண்டைபோடுவது, கடைசியில் பிணம் காணாமல் போவதாக வரும் காட்சி என இஷ்டத்துக்கு வைக்கப்பட்டுள்ளன. அதுவரை காமெடியாக சென்றுகொண்டிருந்த படத்தில் சம்பந்தமே இன்றி எதற்காக கடைசியில் ஒரு சோகப்பாடல்?

காமெடியை மையப்படுத்தி வரும் படங்கள் இவ்வாறான அபத்தக் களஞ்சியங்களாக இருப்பது தமிழில் தொன்றுதொட்டு நடந்து வருவதுதான் என்றாலும், ஓடிடி தளங்களின் வருகைக்குப் பிறகு பார்வையாளர்களின் ரசனைகள் விரிவடைந்த பிறகும் திரைக்கதையை நம்பாமல் ஆங்காங்கே சிரிக்க வைக்கும் ஓரிரு காட்சிகளை நம்பி ஒரு முழு படத்தையே ஒப்பேற்றுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

வரலாறு சினிமா

# "மன்னிப்பது தெய்வீக குணம்" மன்சூர் அலிகான் விவகாரத்தில் த்ரிஷா பதிவு



**சென்னை : நவ. 25,**

**தான் கூறிய சர்ச்சை கருத்துகளுக்கு நடிகர் மன்சூர் அலிகான் மன்னிப்பு கேட்ட நிலையில், நடிகை த்ரிஷா தனது எக்ஸ் தள பக்கத்தில், "தவறு செய்வது மனித குணம்; மன்னிப்பது தெய்வீக குணம்" என பதிவிட்டுள்ளார்.**

சமீபத்தில் வெளியான வீடியோ ஒன்றில் பத்திரிகையாளரின் கேள்விக்கு பதிலளித்த மன்சூர் அலிகான், நடிகை த்ரிஷா குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியிருந்தார். இந்தப் பேச்சுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த விவகாரத்தில் மன்சூர் அலிகான் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக டிஜிபிக்கு தேசிய மகளிர் ஆணையம் பரிந்துரை செய்திருந்தது. இதனையடுத்து சென்னை ஆயிரம் விளக்கு காவல் துறையினர் நடிகர் மன்சூர் அலிகான் மீது இரு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். மேலும் விசாரணைக்கு நேரில் ஆஜராக கோரி அவருக்கு ஆயிரம் விளக்கு மகளிர் போலீஸார் சம்மன் அனுப்பினர். வழக்கு விசாரணைக்கு மன்சூர் அலிகான் நேரில் ஆஜராகியிருந்தார்.

அப்போது போலீசாரிடம், "த்ரிஷாவை ஒரு நடிகையாக மதிக்கிறேன்" என தெரிவித்ததாக கூறினார். இதனையடுத்து நேற்று "எனது சக திரைநாயகி த்ரிஷாவே என்னை மன்னித்துவிடு" என கூறி அறிக்கை வெளியிட்டு மன்னிப்பு கோரியுள்ளார். இந்நிலையில், அவருக்கு பதிலளிக்கும் விதமாக நடிகை த்ரிஷா தனது எக்ஸ் தள பக்கத்தில், "தவறு செய்வது மனித குணம், மன்னிப்பது தெய்வீக குணம்" என பதிவிட்டு இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

▶ **சிபி ஜோடி குஷிதா** - கிரவுன் பிக்சர்ஸ் சார்பில் எஸ்.எம். இப்ராஹிம் தயாரிக்கும் படத்தை பிரகாஷ் கிருஷ்ணன் இயக்குகிறார். இந்த படத்துக்கு இன்னும் பெயரிடவில்லை. 'வஞ்சகர் உலகம்', 'மாஸ்டர்' போன்ற படங்களில் நடித்த சிபி, இப்படத்தில் கதையின் நாயகனாக நடிக்கிறார். அவரது ஜோடியாக குஷிதா கல்லப்பு நடிக்கிறார். மற்றும் சரவணன், ஜெயப்பிரகாஷ், நிரோஷா நடிக்கின்றனர். 'ஜீவி' படத்தின் வசனகர்த்தா பாபு தமிழ் வசனம் எழுதுகிறார். கோபி கிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்ய, கேபர் வாசுகி இசை அமைக்கிறார். கடந்த 20ம் தேதி சென்னையில் படப்பிடிப்பு தொடங்கியது.

வரலாறு உலகம்

# காசாவில் பள்ளி மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 30 பேர் உயிரிழப்பு



**ஜெருசலேம் : நவ. 25, காசா பகுதியில் உள்ள ஐ.நா.வால் நடத்தப்படும் பள்ளிமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 90-க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்று பாலஸ்தீன மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகள், இஸ்ரேல் மீது கடந்த அக்டோபர் 7-ம் தேதி ராக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். அதோடு, தரைவழியாகவும், வான் வழியாகவும், இஸ்ரேல் பகுதிக்குள் ஊடுருவி இஸ்ரேலியர்களை தாக்கினர். இந்தத் தாக்குதலில் பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளே அதிகமாக இறந்திருப்பதாக தகவல் வெளியாகி, உலக மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதையடுத்து, ஹமாஸ் அமைப்புக்கு எதிரான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தி வருகிறது. குறிப்பாக, ஹமாஸின் முக்கிய தலைவர்களை குறிவைத்து கொன்று வருகிறது.

அந்த வகையில், கான் யூனிஸ் என்ற நகரின் ஹமாஸ் கடற்படைத் தளபதி அமர் அபு ஜலாலா கான் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன. கான் யூனிஸ் என்பது காசாவின் தெற்கில் உள்ள ஒரு நகரமாகும், அங்கு நூற்றுக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் இஸ்ரேலின் அறிவுறுத்தலின் பேரில் வடக்கிலிருந்து வெளியேறினர். மேலும் காசா பகுதியில் உள்ள ஐ.நா.வால் நடத்தப்படும் பள்ளிமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர். 90-க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்று பாலஸ்தீன மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா புதிய வைரஸ் ஏதும் கண்டறியப்படவில்லை என விளக்கம்



**பெய்ஜிங் : நவ. 25, சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா தொற்று வேகமாகப் பரவிவருவதாக செய்தி வெளியான நிலையில், "தற்போதைய சூழலை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். சீனாவில் உள்ள தேசிய அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறோம்" என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா தொற்று வேகமாகப் பரவிவருவதாக செய்தி வெளியானது. இந்தநிலையில், உலக சுகாதார அமைப்பு, சீன நோய் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையம் மற்றும் பெய்ஜிங் குழந்தைகள் மருத்துவமனை ஆகியவற்றை தொடர்புகொண்டுவிசாரித்தது. அப்போது அவர்கள்,"பெய்ஜிங் மற்றும்லையானிங்பகுதிகளில் அசாதாரணமான அல்லது புதிய நோய்கிருமிகள் எதுவும் கண்டறியப்படவில்லை. இது ஏற்கனவே அறியப்பட்ட நோய்கிருமிகளால் ஏற்படும் சுவாசநோய்களின் பொதுவான அதிகரிப்புதான்" என்று தெரிவித்ததாக உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

மேலும், "சீனாவின் தற்போதைய சூழலை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். சீனாவில் உள்ள தேசிய அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறோம். அதோடு தடுப்பூசிகள், நோய்வாய்ப்பட்டவர் களிடமிருந்து விலகி இருப்பது மற்றும் முக கவசம் அணிவது போன்ற நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்" என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தி உள்ளது.

சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா தொற்று வேகமாகப் பரவி வருவதால் அது குறித்து அந்நாட்டு சுகாதாரத் துறை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. மேலும் இந்த நிமோனியா தொற்று தொடர்பான தகவல்களைப் பகிரும்படி அந்நாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் கோரிக்கை விடுத்தது. ஊடகச் செய்திகளின்படி சீன மருத்துவமனைகளில் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டுசிகிச்சைக்கு அழைத்துவரப்படும் போக்கு அதிகரித்துள்ளது. குழந்தைகள் அனைவருமே சுவாசக் கோளாறுடனேயே அழைத்துவரப்படுகின்றனர் என்றும் அந்தத் தகவல் தெரிவிக்கிறது.

இது தொடர்பாக நவம்பர் 12-ல் சீன தேசிய சுகாதார ஆணையம் செய்தியாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. அதில், "கொரோனாகட்டுப்பாடுகளைத் தளர்த்தியதன் எதிரொலியாகவே இந்தப்புதிய தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது" என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சூழலில் SARS-CoV-2 வைரஸ் (கோவிட் தொற்று) பரவல், இன்ஃப்ளுயன்சா வைரஸ் பரவல், இன்னும் பிற தொற்றுகள் ஆகியனவற்றின் நிலவரம் குறித்து தெளிவான அறிக்கை அளிக்கும்படி உலக சுகாதார நிறுவனம், சீன அரசுக்குக் கோரிக்கை விடுத்தது. குழந்தைகளைப் பாதிக்கும் RSV வைரஸ், மைகோப்ளாஸ்மாநிமோனியா ஆகியனவற்றைப் பற்றியும் அறிக்கை கோரியது. கடந்த 2019 டிசம்பரில் சீனாவில் பரவிய கோவிட்-19 தொற்று உலகையே ஆட்டிப்படைத்தது கவனிக்கத்தக்கது.

# சந்திரயான்-3 மூலம் கோடீஸ்வரரான மைசூரை சேர்ந்த பொறியாளர்






**மைசூர் : நவ. 25, சந்திரயான் சாதனை சர்வதேச அளவில் இந்தியாவின் அடையாளத்தை மாற்றி இருக்கிறது. கூடவே மைசூரை சேர்ந்த பொறியாளர் ஒருவரை கோடீஸ்வரராகவும் உயர்த்தி உள்ளது.**

சந்திரனின் தென்துருவத்தில் தடம் பதித்ததன் மூலம் சந்திரயானின் அண்மை சாதனை உறுதியானது. சந்திரயான் திட்டத்துக்கான உதிரி பாகங்களை வழங்கியதன் மூலம், அந்த சாதனையில் பல்வேறு இந்திய நிறுவனங்களும் உரிமை கொண்டாடி வருகின்றன. மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ், சந்திரயானுக்கான பெரும் பங்களிப்புகளை சிறிதும் பெரிதுமான இந்திய நிறுவனங்களே வழங்கி உள்ளன.

60 வயதாகும் ரமேஷ் குன்ஹி கண்ணன், மைசூரில் கெய்ன்ஸ் டெக்னாலஜி இந்தியா என்ற நிறுவனத்தை செயல்படுத்தி வருகிறார். அடிப்படையில் எலெக்ட்ரிக்கல் இஞ்சினியாரான இவர், பிரிண்டட் சர்க்யூட் போர்டுகள் உட்பட பல்வேறு எலெக்ட்ரானிக் உதிரி பாகங்களை வடிவமைப்பதில் வித்தகர். சந்திரயான 3 விண்வெளித் திட்டத்தின் ரோவர் மற்றும் லேண்டரை இயக்குவதற்கான மின்னணு உதிரி பாகங்களை குன்ஹி கண்ணனின் கெய்ன்ஸ் நிறுவனமே தயாரித்து வழங்கியுள்ளது.

இந்ததகவல்வெளியுலகை எட்டியதுமே அவரது நிறுவனத்தின் பங்குகள் மும்பை பங்குச்சந்தையில் உச்சம் தொட்டிருப்பதோடு, ஏராளமான ஆர்டர்களையும் குவித்துள்ளது. 2022 நவம்பரில் மும்பை பங்குச்சந்தையில் பட்டியலிப்பட்ட கெய்ன்ஸ் பங்குகள், சந்திரயான் 3 வெற்றியை அடுத்து 3 மடங்கு உயர்ந்தன. நிறுவனத்தின் பங்குகளில் 64 சதவீதத்தை வைத்திருக்கும் குன்ஹி கண்ணன் இதன் மூலம் கோடீஸ்வரராகி இருக்கிறார்.

1988ல் கெய்ன்ஸ் நிறுவனத்தை கண்ணன் தொடங்கினார். பத்தாண்டுகள் இடைவெளியில் நிறுவனத்தின் தலைவராக இணைந்த கண்ணனின் மனைவி சவிதாவின் பெயருக்குதனியாக பங்குகள் சேர்ந்தது. நிறுவனம் தொடங்கியது முதலே தள்ளாட்டமாய் உருண்டோடிய நிலைமை, மேக் இன் இந்தியா திட்டங்களால் பலனடைய ஆரம்பித்தது. இஸ்ரோ வாயிலாக கிடைந்த சந்திரயான் திட்டப்பணிகள் மூலம், சர்வதேச அளவில் கெய்ன்ஸ் பெயர் பெற்றிருக்கிறது.

கெய்ன்ஸ் நிறுவனத்தின் ஆண்டு வருவாய் 2020-ம் நிதியாண்டில், அமெரிக்க டாலர் மதிப்பில் 49 மில்லியனில் இருந்து மூன்று மடங்கு அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் அதன் நிகர லாபம் மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிதியாண்டில் 11.4 மில்லியன் டாலரை எட்டியது. மார்ச் 2024-ல் முடிவடையும் நடப்பு நிதியாண்டில் அதன் வருவாய் சுமார் 208 மில்லியன் டாலராக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. சந்திரயான் மூலம் கெய்ன்ஸ் நிறுவனமும் அதன் லாபமும் விண்ணைத் தொட்டுள்ளது.

# இந்தியாவின் ஏற்பாட்டில் இந்தோனேசியாவில் சிறுதானிய உணவு திருவிழா




**ஜகர்த்தா : நவ. 25, சிறுதானியங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தோனேசியாவில் உணவுத் திருவிழாவுக்கு இந்தியா ஏற்பாடு செய்துள்ளது.**

இது குறித்து ஆசியானுக்கான இந்திய தூதர் ஜெயந்த் கோப்ரகடே கூறியதாவது: ஆசியானுக்கான கூட்டமைப்பில் இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, புருனே, வியட்நாம், லாவோஸ், மியான்மர், கம்போடியா ஆகிய 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த நாடுகளில் சிறுதானியங்கள் சார்ந்த பொருட்களுக்கான சந்தைகளை உருவாக்கவும், அந்நாட்டு மக்களின் சிறந்த உணவுக்கான தேர்வாக சிறுதானியத்தை மாற்றி அமைக்கும் வகையில் விழிப்புணர்வை உண்டாக்கவும் இந்தியா இந்த உணவு திருவிழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்த திருவிழா 5 நாட்கள் வரை நடைபெற உள்ளது. ஆசியானுக்கான இந்திய தூதரகம், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் இணைந்து இந்த உணவு திருவிழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் கடந்த செப்டம்பர் 7-ம் தேதி ஆசியான் - இந்தியா மாநாட்டின் போது உணவுப் பாதுகாப்பு பற்றிய கூட்டறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில் இரண்டு மாதங்களிலேயே சிறுதானிய திருவிழாவை நாங்கள் நடத்தி காட்டியுள்ளோம். உணவு பாதுகாப்பை உறுதிசெய்வதில் சிறுதானியங்களின் பங்கு மிக முக்கியமானதாக விளங்குகிறது என்று கோப்ரகடே தெரிவித்தார்.

# இஸ்ரேல் செல்கிறார் எலான் மஸ்க் காசா எல்லையோர பகுதிகளை பார்வையிடுகிறார்



**ஜெருசலேம் : நவ. 25, எக்ஸ் நிறுவனத்தின் தலைவரும், உலகின் நம்பர் 1 பணக்காரருமான எலான் மஸ்க் அடுத்த வாரம் இஸ்ரேலுக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அப்போது அவர் அக்டோபர் 7ம் தேதி ஹமாஸால் தாக்கப்பட்ட காசா எல்லைக்கு அருகிலுள்ள நகரங்களுக்குச் செல்வார் என்று ஹீப்ருவை மேற்கோள் காட்டி ஜெருசலேம் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.**

எலான் மஸ்க் தனது பயணத்தின் போது இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக் மற்றும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்திக்கவுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வார தொடக்கத்தில், எக்ஸ் சமூக வலைதள பதிவில், எக்ஸ் சமூக வலைதளத்தின் விளம்பர வருவாய் மற்றும் சந்தாதாரர்கள் மூலம் கிடைக்கும் அனைத்து வருமானத்தையும், போரினால் பாதிக்கப்பட்ட இஸ்ரேல், காசா மருத்துவமனைகள் அங்குள்ள செஞ்சிலுவைச் சங்கம், கிரசன்ட் ஆகியவற்றிற்கு நன்கொடையாக அளிப்பதாக மஸ்க் அறிவித்தார்.

மற்றொரு பதிவில், "நிதி எவ்வாறு செலவழிக்கப்படுகிறது என்பதை நாங்கள் கண்காணிப்போம் மற்றும் செஞ்சிலுவை, பிற சேவை நிறுவனங்களிடம் இருந்து சிறந்த யோசனைகள் வரவேற்கப்படுகின்றன. இனம், மதம் அல்லது வேறு எதையும் பொருட்படுத்தாமல் அப்பாவிகள் குறித்தே கவலைப்பட வேண்டும்." என்று தெரிவித்திருந்தார். கடந்த மாதம், இஸ்ரேல் தாக்குதலில் காசாவின் தொலைத்தொடர்பு கேபிள் துண்டிக்கப்பட்டு இருந்த நிலையில், எலான்மஸ்க்தனது லட்சியமான புதிய ஸ்டார் லிங்க் செயற்கைக்கோள் மூலம் காஸா பகுதிக்கு இணைய சேவை வழங்க விரும்புவதாகக் கூறியிருந்தார், இது தகவல் தொடர்பு அமைச்சர் ஷ்லோமா கர்ஹி உட்பட இஸ்ரேலிய அதிகாரிகளிடையே கோபத்தை தூண்டியது.

கர்ஹி அவ்வாறு செய்ய முயற்சிக்கும் எந்த நடவடிக்கையையும் எதிர்த்துப் போராடுவதாகக் கூறினார், இருப்பினும் காசாவிற்கு ஸ்டார் லிங்க் செயற்கைக்கோள் மூலம் இணைய சேவை வழங்கப்பட்டால், அது முற்றிலும் மனிதாபிமான காரணங்களுக்காக பயன்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்த நிறுவனம் "அசாதாரண நடவடிக்கைகளை" எடுக்கும் என்று மஸ்க் வலியுறுத்தினார். முன்னதாக ரஷ்யா - உக்ரைன் போரின் போதும் ஸ்டார் லிங்க் மூலம் எலான் மஸ்க் இணைய சேவையை வழங்கியிருந்தார்.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் குழுவினருக்கும் இடையில் தொடங்கும் நான்கு நாள் போர் நிறுத்தத்தின் முதல் நாள் நேற்று தொடங்கியது. இதில் பணயக்கைதிகள், பாலஸ்தீனிய கைதிகள் மற்றும் காசா பகுதிக்குள் நுழையும் முக்கியமான மனிதாபிமான உதவிகள் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அக். 7-ம் தேதி இஸ்ரேல் மீது காசா தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, அதிகாரப்பூர்வமாக போர் அறிவித்து ஒரு மாதத்துக்கும் மேலாக காசா மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

கடல், வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து தற்போது தரை வழியாக தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம், காசாவின் மருத்துவமனைகள், மசூதிகள், முகாம்கள் மீது குறிவைத்து தாக்குதல் நடத்துகிறது. இப்போருக்கு பல நாடுகள் கண்டனங்கள் தெரிவித்த நிலையில், 1,300க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர். அதே நேரத்தில் காசாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை சுமார் 15,000 ஆக உயர்ந்துள்ளது.

# பிரிட்டன் செல்ல விசா பெறும் நாடுகளின் பட்டியல்

## முதலிடம் பிடித்தது இந்தியா




**பிரிட்டன் : நவ. 25, பிரிட்டன் செல்வதற்கு விசா பெறும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.**

பிரிட்டன் தேசிய புள்ளியியல் அலுவலகம் 2023 செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் பட்டியலை வெளியிட்டது. இந்தபுள்ளிவிவர தரவுகளின்படி, திறன்மிக்க தொழிலாளர்களுக்கான நுழைவு இசைவு (விசா) பிரிவில் மட்டுமின்றி, மருத்துவச்சேவைபணிக்கான விசா பிரிவிலும் இந்தியர்கள் முதலிடத்தில் இருப்பது தெரியவந்துள்ளது.

இந்தியமருத்துவச்சேவை பணியாளர்களுக்கு பிரிட்டன் அளித்துள்ள விசா ஒப்புதலைப் பொருத்தவரை, முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2 மடங்குக்கு மேல் கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 38,866 மருத்துவச் சேவை பணியாளர்களுக்கு விசா அளிக்கப்பட்டது. தொடர்ந்து, நிகழாண்டில் 1,43,990 பேருக்கு விசா அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவை அடுத்த இடங்களில் நைஜீரியா, ஜிம்பாப்வே போன்ற நாடுகள் உள்ளன.

மேலும், திறன் மிக்க தொழிலாளர்கள்விசாபிரிவைப் பொருத்தவரை, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்தியர்களுக்கு அளிக்கப்பட்ட விசா 11 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளது. இந்த பிரிவின் கீழ் முந்தைய ஆண்டில் இந்தியர்களுக்கு 20,360 விசாகள் வழங்கப்பட்ட நிலையில், நிகழாண்டில் 18,107 விசாகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. அதனை தொடர்ந்து, மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்த விசாப் பிரிவிலும் இந்தியர்களே முன்னிலையில் உள்ளனர்.

கல்வி உதவித் தொகையுடன் கூடிய உயர்கல்வி விசா பிரிவைப் பொருத்தவரை நிகழாண்டில் 1,33,237 விசாகள் இந்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 5 சதவீதம், அதாவது 5,804 விசாகள் கூடுதலாகும். 2019-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இது 5 மடங்கு அதிகமாகும். இந்த பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மொத்த விசாக்களில் இந்தியர்கள் மட்டும் 27 சதவீத பங்கை வகிக்கின்றனர்.

சுற்றுலா விசா பிரிவிலும் 27 சதவீதத்துடன் இந்தியர்கள் முன்னிலை வகிக்கின்றனர். அடுத்த இடங்களில் சீனா (19%), துர்கி (6%) நாடுகள் உள்ளன. குடும்ப உறுப்பினர்களை பிரிட்டனுக்கு அழைத்து வரும் நாட்டினரின் எண்ணிக்கையில் 43,445 விசாகளுடன் இந்தியர்கள் இரண்டாம் இடத்தில் உள்ளனர். இந்தப் பிரிவில் 60,506 விசாகளுடன் நைஜீரியா முதலிடத்தில் உள்ளது.

# நெதர்லாந்து தேர்தல்

## ஆட்சியை கைப்பற்றுகிறது தீவிர வலதுசாரி கட்சி



**நெதர்லாந்து : நவ. 25, நெதர்லாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தீவிர வலதுசாரிக் கொள்கையுடைய கீர்த் வில்டர்ஸ் தலைமையிலான சுதந்திரக் கட்சி (பிவிவி) எதிர்பாராத வகையில் வெற்றி பெற்றுள்ளது.**

150 இடங்களைக் கொண்ட நெதர்லாந்து நாட்டு நாடாளுமன்றக் கீழவை பிரதிநிதிகள் சபைக்கு நவம்பர் 22ம் தேதி புதன்கிழமை தேர்தல் நடைபெற்றது. இதில், பிவிவி கட்சி 37 தொகுதிகளில் வெற்றி பெற்றது. முன்னதாக, வெறும் 17 இடங்களை மட்டுமே வைத்திருந்த அந்தக் கட்சியின் பலம் இரண்டு மடங்குக்கும் மேலாகும் என்று பெரும்பான்மையானவர்கள் எதிர்பார்க்கவில்லை. தற்போது பதவி விலகும் பிரதமர் மார்க் ரூட் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சியான விவிடி-க்கு வெறும் 20 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

அதனை தொடர்ந்து, கீர்த்வில்டர்ஸ்தலைமையில் அடுத்த அரசு அமைவது உறுதியாகியுள்ளது. தீவிர வலதுசாரி நிலைப்பாட்டை கொண்ட கீர்த் வில்டர்ஸ், இஸ்லாம் மதத்துக்கு எதிரான கடுமையான கருத்துகளை வெளிப்படுத்தி வருபவர். தேர்தல் நேரத்தில் இஸ்லாம் எதிர்ப்பு பிரசாரத்தை அவர் முன்வைக்காவிட்டாலும், அதற்கு முன்னர் குரான், மசூதிகள், ஹிஜாப், முஸ்லிம் மதத் தலைவர்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியது குறித்து தற்போது பல்வேறு தரப்பினரும் கவலை தெரிவித்துள்ளனர்.

கீர்த் வில்டர்ஸின் வெற்றியை தொடர்ந்து பிரான்ஸ் மற்றும் ஹங்கேரியின் வலதுசாரி தலைவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். இந்த நிலையில், ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த மற்ற தலைவர்களுக்கு கீர்த் வில்டர்ஸின் வெற்றி கவலையை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. மேலும், தீவிர ஐரோப்பிய யூனியன் எதிர்ப்பாளரான அவர், தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் பிரெக்ஸிட்டைப் போல் 'நெக்ஸிட்' நடவடிக்கையை முன்னெடுக்கப்போவதாக அறிவித்திருந்தார். புதிய அரசை அமைப்பதற்காக ஒருமித்த கருத்துடைய கட்சிகளின் ஆதரவை தற்போது கீர்த் வில்டர்ஸ் கோரியுள்ளார்.

# அமெரிக்காவில் மனிதரின் பெருங்குடலில் றெக்கை கட்டிப் பறந்த ஈ

## பெரும் குழப்பத்தில் மருத்துவர்கள்



**அமெரிக்கா : நவ. 25, அமெரிக்காவில் 63 வயது நபர் ஒருவரின் பெருங்குடலில் உயிருடன் ஒரு ஈ வலம் வந்ததைக் கண்டு மருத்துவர்கள் திடுக்கிட்டுப்போயுள்ளனர். உயிரோடு ஒரு ஈ மனிதக் குடலின் மடிப்புகளில் வசிக்க முடியுமா என்ற விவாதத்தில் மருத்துவ உலகம் பரபரத்துக் கிடக்கிறது.**

அமெரிக்கவின் மிசோரியை சேர்ந்த 63 வயது நபர், வழக்கமான உடல் பரிசோதனையின் அங்கமாக கொலொனோஸ்கோபி செய்துகொள்ள அண்மையில் மருத்துவமனை வந்திருந்தார். அமெரிக்கர்கள் மத்தியில் அதிகம் தென்படும் பெருங்குடல் புற்றுநோயை முன்கூட்டியே அடையாளம் காண, கொலொனோஸ்கோபி பரிசோதனை நடைமுறையை மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

வழக்கமான மருத்துவ ஸ்கோப்பி நடைமுறைகளில் ஒன்றாக, கொலொனோஸ்கோபி மேற்கொள்ளப்படும். நீண்ட நெகிழ்வான சிறுகுழாயின் முனையின் பொறுத்தப்பட்ட ஒளி உமிழும் கேமரா உதவியுடன், பெருங்குடலின் உட்புறத்தை மருத்துவர்கள் ஆராய்வார்கள். அப்படியான சோதனையின் போது வித்தியாசமான ஓசையை கேட்டார்கள்.

இதனையடுத்து விரிவான பரிசோதனையை தொடர்ந்த மருத்துவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. குடலின் உட்புற மடிப்பு இடுக்கில் ஒரு ஈ உயிரோடு வசித்ததோடு, அவ்வப்போது றெக்கையடித்து குடலுக்குள் பறந்தும் வந்தது. மனித உடலுக்குள் உயிரோடு ஒரு ஈ எப்படி குடித்தனம் நடத்த முடியும் என மருத்துவர்கள் குழம்பிப்போனார்கள்.


மருத்துவர்களின் ஆய்வு முடிவில், மனிதர்கள் உண்ணும் பழங்கள் மற்று காற்கறிகளில் முட்டையாக சேர்பவை, அவற்றை உண்பவரின் வயிற்றுக்குள் செல்லும்போது ஈக்கள் மற்றும் அவற்றின் லார்வாக்களாக குடலில் குடிபுக காரணமாகிறது. முட்டையிலிருந்து முழுமையான வளர்ந்த உயிரினமாக ஈக்கள் மாற உயிருள்ள திசுக்கள் அவசியம். மிகவும் அரிதான நிகழ்வாக, மனித குடலுக்குள் குஞ்சு பொறிக்கும் அவை, குடல் திசுக்களை சார்ந்து வளர வாய்ப்பாகின்றன.

குடலில் ஈ உடன் வந்த மிசோரி நபருக்கு தங்களது வழக்கமான மருத்துவ நடைமுறைகள் வாயிலாக ஈயை மருத்துவர்கள் வெளியேற்றினர். குடலுக்குள் ஈயால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அறிகுறிகள் எதையும் உணர்வதில்லை. மருத்துவர்களின் இந்த கூற்றும், ஆய்வும், காய்கனி உள்ளிட்டவற்றை கவனமாக உட்கொள்ள வேண்டியதை வலியுறுத்துகிறது.



# சுரங்கப்பாதையில் சிக்கி உள்ள தொழிலாளர்களை நெருங்க 15 மீட்டர் மட்டுமே உள்ளது

# வைகை அணையில் இருந்து 4 ஆயிரம் கன அடி நீர் திறப்பு: கரையோர மக்களுக்கு எச்சரிக்கை





# கத்தாரில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியர்களின் மேல்முறையீடு ஏற்பு


| சென்னை / புதுக்கோட்டை | 25.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ரங்கநாத் மிஸ்ரா , இந்தியாவின் 21வது தலைமை நீதிபதி (பி.1926) (இ.2012)



திருவாரூர் பக்தவத்சலம் , தென்னிந்திய மிருதங்க இசைக் கலைஞர் (பி.1956)



## இன்றைய நினைவு நாள்

துவாரம் வேங்கடசுவாமி நாயுடு , தெலுங்கு கருநாடக, வயலின் இசைக் கலைஞர் (பி.1893) (இ.1964)



வி. ஏ. அழகக்கோன் , இலங்கை அரசியல்வாதி (பி.1903) (இ.1973)



ஒய். பி. சவாண் , இந்தியாவின் 5வது துணைப் பிரதமர் (பி.1913) (இ.1984)



சிதாராதேவி , இந்திய நடிகை, நடனக் கலைஞர் (பி.1920) (இ.2014)



**பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள்**